வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 25.10.2021 திங்கட்கிழமை | இதழ் : 324 | பக்கங்கள் : 16






### ஆளும் கூட்டணிக்குள் மேலும் விரிசல்

# கோட்டாபயவுடனான சந்திப்பில் விமல் உட்பட 21 எம்.பிக்கள் இல்லை!



கொழும்பு, ஒக்ரோபர் 25

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்று நடைபெற்ற ஆளும் கூட்டணியின் பாராளுமன்றன கூட்டத்தில் அமைச்சர் விமல் வீரவன்ஸ உட்பட 21 பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்கவில்லை. 15

## அதிகரிக்கிறது டெங்கு மக்களே அவதானம்!

### தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு

கொழும்பு, ஒக். 25

நாட்டில் கோவிட் தொற்று குறைவடைந்து வருகின்றபோதிலும் , மறுபுறத்தில் டெங்கு பரவல் அதிகரித்து வருகிறது. எனவே, பொது மக்கள் தமது சுற்றாடலை தூய்மையாகப் பேணுவதுடன் அவதானத்துடன் செயல்படவும் வேண்டும் என்று தேசிய டெங்கு கட்டுப் பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் தரவுகளுக்கமைய ஜனவரி முதல் இந்த மாதம் முதலாம் வாரம் வரையில் 20 ஆயிரத்து 811 15

## ஈஸ்டர் தாக்குதல்கள் விடயத்தில் சரியெனபடுவதை செய்யுங்கள்!

### பேராயருக்கு பாப்பரசர் கடிதம்



கொழும்பு, ஒக். 25

ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பில் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை சரியென நினைக்கும் சிறந்த விடயத்தை செய்யுமாறும், தாம் விசுவாசித்து செய்ய வேண்டிய நல்ல விடயத்தை கூறுமாறும் பரிசுத்த பாப் 15



## கொரோனாவால் 18 பேர் மரணம்!

கொழும்பு, ஒக். 25

நாட்டில் நேற்றுமுன்தினம் கொரோனா தொற்றால் மேலும் 18 பேர் உயிரிழந்தனர் என்று அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் 10 ஆண்களும் 08 பெண்களும் உள்ளடங்குகின்றனர். அந்த வகையில், 15

## பணிக்கு திரும்புகின்றனர் ஆசிரியர்கள்; வார நாட்களில் மட்டுமே கற்பிப்பார்கள்!

### இணையவழி கற்பித்தலிலும் ஈடுபடார்

கொழும்பு, ஒக். 25

ஆசிரியர், அதிபர்களின் சம்பள முரண்பாட்டுக்குத் தீர்வு காண்பதற்கான தொழில்சங்க நடவடிக்கையின் அடுத்த கட்டம் குறித்து ஆசிரியர் அதிபர் தொழில்சங்க முன்னணி கல்வி அமைச்சுக்கு அறியப்படுத்தியுள்ளது.

இது தொடர்பில் 16 தொழில் சங்கங்களின் முக்கியஸ்தர்களின் கையொப்பத்துடன், கல்வி அமைச்சின் செயலாளருக்கு நேற்றுமுன்தினம் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் ஆறு முக்கிய விடயங்கள் குறித்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்கள், அதிபர்களின் சம்பளப் பிரச் 15

## டெல்டா பிளஸ் நாட்டில் பரவலாம்!

கொழும்பு, ஒக். 25

கோவிட் 19 வைரஸ்கள் நாட்டில் பரவியது போன்று டெல்டா பிளஸ் திரிபும் பரவலாம். இது குறித்து அவதானத்துடன் செயல்பட்டு வருகிறோம் என்று சுகாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் இலங்கை மருத்துவ சங் 15

## தேர்தல் நடந்தால் அரசாங்கம் நிச்சயமாக தோல்வியடையும்

### இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ



கொழும்பு, ஒக். 25

“தேர்தல் வெற்றியை இலக்காகக் கொண்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சேதன பசளைத் திட்டத்தை செயல்படுத்தவில்லை.நாளை தேர்தல் நடைபெற்றால் அரசாங்கம் நிச்சயம் தோல்வியடையும். விஷத்தை உண்டு மக்கள் இறந்தாலும் பரவாயில்லை. எனக்கு தேர்தல் வெற்றி தான் முக்கியமென ஜனாதிபதி கருதவில்லை.”

இவ்வாறு கூறியிருக்கின்றார் விவசா 15



## பாடசாலைகள் இன்று ஆரம்பம்; சீருடை அணிவது அவசியமல்ல!

கொழும்பு, ஒக். 25

பொருத்தமான ஏதேனு மோர் ஆடையுடன் இன்று முதல் பாடசாலைக்கு வருகை தருவதற்கு மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

கற்றல் உபகரணங்கள் மற்றும் சீருடைகளை பெற்றுக்கொள்ள முடி 15



# வடக்கில் மீளஉயரும் கொரோனா; நேற்றும் 35 பேருக்கு தொற்றுறுதி!

யாழ்ப்பாணம், ஒக். 25

வவுனியா மாவட்டத்தில் 23 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் 35 பேருக்கு கொரோனா தொற்று நேற்று உறுதி செய்யப்பட்டது.

யாழ். போதனா மருத்துவமனையில் நேற்று நடத்தப்பட்ட பி. சி. ஆர். சோதனையிலேயே இந்தத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

இதன்படி, வவுனியா சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 17 பேர், செட்டிக்குளம் ஆதார மருத்துவமனையில் ஒருவர், நெடுங்கேணி பிரதேச மருத்துவமனையில் ஒருவர், பூவசரங்குளம் பிரதேச மருத்துவமனையில் 03 பேர், வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையில் ஒருவர் என மாவட்டத்தில் 23 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

யாழ். போதானா மருத்துவமனையில் 04 பேர், சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் 02 பேர், தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் ஒருவர் என யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 7 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில், மல்லாவி ஆதார மருத்துவமனையில் 02 பேர், முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனையில் ஒருவர், மணலாறு (வெலிஓயா) சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 02 பேர் என 5 பேர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டனர். (ஐ)



# பெருமளவு வெடிபொருட்கள் வடமராட்சி கிழக்கில் மீட்பு!

வடமராட்சி, ஒக். 25

மருதங்கேணி தெற்கு தாளையடி பகுதியில் தனியார் ஒருவர் நேற்று காலை தனது காணியை துப்பரவு செய்த வேளை அதிகளவான வெடிபொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

இது தொடர்பில், காணி உரிமையாளர் விசேட அதிரடிப் படையினருக்கு தகவல் அளித்தார். அவர்கள் நீதிமன்ற அனுமதியுடன் நேற்று மதியம் அந்தக் காணியில் அகழ்வு நடத்தி ஆயுதங்களை மீட்டனர்.

மோட்டார் ஷெல்கள், ஆர். பி. ஜி., துப்பாக்கி ரவைகள் எனப் பெருமளவு வெடிபொருட்கள் இவ்வாறு மீட்கப்பட்டன. நீதிமன்ற அனுமதியுடன் இவற்றை செயலிழக்க செய்வதற்கான நடவடிக்கையை பொலிஸார் மேற்கொள்ளவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ - 02)

# நேற்று மட்டும் 555 தொற்றாளர்

கொழும்பு, ஒக். 25

நாட்டில் நேற்று 555 கோவிட் - 19 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதனால், நாட்டில் நேற்று வரை அடையாளம் காணப்பட்ட கோவிட் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 36 ஆயிரத்து 84ஆக அதிகரித்துள்ளது. (ஐ)



# விபத்துகளை தவிர்ப்பதற்கு சைக்கிள்களுக்கு 'ஸ்ரிக்கர்'!

## யாழ். பொலிஸார் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 25

விபத்துக்களை தவிர்க்கும் பொருட்டு சைக்கிள்களுக்கு இரவில் ஒளிரும் ஸ்ரிக்கர் ஒட்டும் பணி நேற்று யாழ்ப்பாணம் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் நகரில் விபத்துக்கள் அதிகரித்து வரும் நிலையிலேயே இந்தப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

யாழ்ப்பான பிராந்தியத்திற்கான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உஜித் லியனகேயின் வழிகாட்டுதலின் கீழ் குறித்த வேலை திட்டமானது யாழ் பண்ணை சுற்றுவட்டத்தில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ். பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவு பொறுப்பதிகாரி மற்றும் போக்குவரத்து பொலிஸார் இணைந்து சைக்கிள்களுக்கு ஒளிரும் ஸ்ரிக்கர்களை ஒட்டினர். (ஐ-03)

கல்வி tv CHANNEL-1

25.10.2021
திங்கட்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

கல்வி tv CHANNEL - 2

25.10.2021
திங்கட்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |




# ரக்பி ஜாம்பவான் சந்திரிஷன் காலமானார்

கொழும்பு, ஒக். 25

ரக்பி ஜாம்பவான் சந்திரிஷன் பெரேரா நேற்று ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

நீர்க்கொழும்பு மருத்துவமனையில் நேற்று சேர்க்கப்பட்ட நிலையிலேயே அவர் உயிரிழந்தார்.

இலங்கை ரக்பி அணியின் தலைவர், பயிற்றுவிப்பாளர், உடற்பயிற்சி பயிற்றுவிப்பாளர் என அவர் செயல்பட்ட நிலையில், செய்தியாளராகவும், வர்ணனையாளராகவும் அவர் செயல்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேபோல், இவர் இலங்கை கிரிக்கெட் அணியின் உடற்பயிற்சி பயிற்றுநராகவும் பணியாற்றியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu
25.10.2021 திங்கட்கிழமை
பிலவ வருடம், ஐப்பசி 08

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk, news@eelanadu.lk
**தொலைபேசி : 021 730 1370**

# யாரால், ஏன் இந்த நிலைமை?

மாகாண சபை தேர்தல் இடம்பெற்றால், வடக்கு மாகாண சபையை எங்களால் கைப்பற்ற முடியுமா என்னும் கேள்வியிருப்பதாக, பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் அண்மையில் தெரிவித்திருந்தார். கடந்த பாராளுமன்ற தேர்தலில் கூட்டமைப்பு எதிர்கொண்ட பின்னடைவுகளை கருத்தில் கொண்டு சிந்திக்கும் எவராலும் இதனை ஊகிக்க முடியும். ஆனால், இந்த இடத்தில் கேட்க வேண்டிய கேள்வி - ஏன் இவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டது?

கடந்த ஆட்சிக் காலத்தில் கூட்டமைப்பு கண்மூடித்தனமான நம்பிக்கையுடன் ஐந்து வருடங்களை செலவிட்டிருந்தது. எதிர்க்கட்சித் தலைவர் ஆசனத்துடன் சம்பந்தன் திருப்தியுற்றிருந்தார். பங்காளிக் கட்சிகளும் அமைதி காத்தன. இந்தக் காலத்தில் முன்வைக்கப்பட்ட எந்தவொரு விமர்சனத்தையும் கூட்டமைப்பின் தலைவர்கள் கருத்தில் கொள்ளவில்லை. வரமுடியாத அரசியல் யாப்பு ஒன்றுடன் மல்லுக்கட்டிக் கொண்டிருந்தனர்.

இறுதியில் மைத்திரிபால சிறிசேனவிற்கும் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையிலான முரண்பாடுகளின் களமாக தென்னிலங்கை அரசியல் உருமாறியது. இந்த முரண்பாடுகளின் போதுகூட, ரணிலை பாதுகாக்கும் முயற்சியில்தான், கூட்டமைப்பினரின் நேரம் செலவானது. கூட்டமைப்பு ரணிலை பாதுகாக்க முற்பட்டதற்கும் தமிழ் மக்களின் நலன்களுக்கும் ஏதாவது தொடர்புண்டா? நிச்சயமாக இல்லை. இறுதியில் ரணில் விக்கிரமசிங்கவால் அவரின் கட்சியைக் கூட காப்பாற்ற முடியாமல் போனது. ஒரு தலைமை எந்தவொரு விடயத்தை முன்னெடுக்கும்போதும் அதனால், அவர்கள் பிரதிநிதித்துவம் செய்யும் மக்களுக்கு நன்மை உண்டாக வேண்டும். அவ்வாறில்லை என்றால் அந்த செயல் தவறானதுதான்.

இந்த பின்புலத்தில்தான் கூட்டமைப்பு அதன் செல்வாக்கை படிப்படியாக இழக்க நேர்ந்தது. உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் கூட்டமைப்பின் மீதான மக்கள் அதிருப்தியை தெளிவாகப் படம்பிடித்துக் காண்பித்தது. அதன் பின்னர்தான் வடக்கு, கிழக்கு அபிவிருத்தி தொடர்பில் கூட்டமைப்பு பேச முற்பட்டது. ஆனாலும் நிலைமைகளில் பெரியளவில் மாற்றங்களை ஏற்படுத்த முடியவில்லை. இதன் தொடர்ச்சியாகவே பாராளுமன்ற தேர்தலில் கூட்டமைப்பு மோசமான பின்னடைவை சந்திக்க நேர்ந்தது.

தற்போதுள்ள நிலையில் மாகாண சபை தேர்தல் இடம்பெறுமாயின், கூட்டமைப்பால் தனித்து வடக்கு மாகாண சபையில், பெரும்பான்மை ஆசனங்களை பெறமுடியாமல் போகலாம். ஏனெனில், விக்னேஸ்வரன் தலைமையிலான அணியினரும், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அணியினரும் தனித்து போட்டியிட்டால், வடக்கு மாகாண சபையின் இருப்பும் கேள்விக்கு உள்ளாகலாம். அரச ஆதரவு தமிழ் கட்சிகளின் கையோங்குவதற்கான வாய்ப்புக்களே அதிகம் தென்படுகின்றன.

இந்த நிலைமையை எவ்வாறு மாற்றியமைக்கலாம்? முடிந்தவரைக்கும் தமிழ்த் தேசிய தரப்புக்கள் ஒன்றாக தேர்தலை எதிர்கொள்வதன் ஊடாக மட்டும்தான், இந்த நிலைமையை சரிசெய்ய முடியும். வடக்கு மாகாண சபையை பெரும்பான்மை பலத்துடன் கைப்பற்ற முடியும். இதற்கான பொறிமுறை தொடர்பிலேயே கூட்டமைப்பினர் இப்போது சிந்திக்க வேண்டும். நிலைமை மோசமாக இருக்கின்றது என்று கூறிவிட்டு அமைதியாக இருப்பதால் நிலைமைகளை மாற்றியமைக்க முடியாது. நிலைமை கூட்டமைப்புக்கு பாதகமாக இருக்கின்றது என்றால் அதற்கு கூட்டமைப்பிலுள்ள அனைவரும்தான் பொறுப்பு. ஒருவர்மீது விரல்நீட்டிவிட்டு மற்றவர்கள் அமைதியடைந்துவிட முடியாது.

# ‘வேதாளம் மீண்டும் முருங்கையில் ஏறும் நிலை’: ஏறாவூர் பொலிஸ் தாக்குதல்!

**- அலசுவது இராஜதந்திரி -**

*இலங்கையில் யுத்த கால வடுக்களை நீக்கி சட்டம் - ஒழுங்கு என்பவற்றுக்கு ஏற்பட்டுள்ள சவால்களைக் கையாளும் விதத்தில் அனைத்து தரப்பினரும் செயல்பட்டு வருகின்ற இத்தருணத்தில் மட்டக்களப்பின் ஏறாவூர் பிரதேசத்தில் இளைஞர் ஒருவர் போக்குவரத்து பிரிவு பொலிஸ்காரர் ஒருவரால் கண்மூடித்தனமான முறையில் தாக்கப்பட்டுள்ளார்.*

*இதனையடுத்து, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர உடனடியாக அந்தத் தாக்குதலுடன் சம்பந்தப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிளை பதவியிலிருந்து இடைநிறுத்தம் செய்திருப்பதோடு, குறித்த சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளுக்கும் உத்தரவிட்டுள்ளார்.*

*யாழ்ப்பாண மாநகரின் வீரசிங்கம் மண்டபத்தை அண்டியுள்ள யாழ்ப்பாண கோட்டை பகுதியில் பொலிஸ் அடாவடித்தனத்தின் உச்சக்கட்டத்ததை நினைவுபடுத்தும் 10 கல் தூண்கள் காணப்படுகின்றன. அந்தக் கல் தூண்கள் 1974ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நான்காவது அனைத்துலக தமிழாராய்ச்சி மகாநாட்டின் இறுதித் தினத்தில் குழப்பநிலையொன்றின் போது பொலிஸார் மேற்கொண்ட தாக்குதலில் உயிரிழந்த பத்து அப்பாவி பொதுமக்கள் நினைவாகவே நிறுவப்பட்டுள்ளன.*

*எழுபதாம, எண்பதாம் ஆண்டுகள் என்பவை வட பகுதியில் பொலிஸ் - பொதுமக்கள் உறவில் விரிசல்கள் விழ ஆரம்பித்த காலப் பகுதிகளாகும்.*

*யாழ்ப்பாண நகரில் அமைந்திருந்த பழைய சந்தைக் கட்டடமும் அடிக்கடி தீ வைப்புக்குள்ளாகியது. தொடர்பாக அச்சமயத்தில் பொலிஸார்மீதே குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. இதுதவிர, யாழ்ப்பாண பொதுசன நூலக கட்டிட தீவைப்பு தொடர்பாகவும் வெளியிடங்களிலிருந்து 1981ஆம் ஆண்டு இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்தி சபை தேர்தல் பணிகளுக்காக யாழ்ப்பாணம் வந்திருந்த பொலிஸ்காரர்கள் சம்பந்தப்பட்டிருந்தனர் என்றே குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.*

*எனவே, பொலிஸாருக்கும் பொது மக்களுக்கும் இடையே அடிக்கடி ஏற்பட்டு வந்த கசப்பான நிகழ்வுகளே நாளடைவில் ஒரு நீண்ட கால யுத்த நிலவரத்துக்கும் வழியமைத்திருந்தது.*

*எனவே, சட்டம் - ஒழுங்கை பேணும் நடவடிக்கைகளை மேற்கொள்பவர்கள் மிக அவதானத்துடனும் கண்ணியத்துடனும் பொது மக்கள் பாதுகாப்பு தொடர்பாக பணியாற்ற வேண்டியவர்களாகின்றனர்.*

*பொலிஸாரின் சட்டம் ஒழுங்கு நடவடிக்கைகளைப் பொறுத்தவரை வடக்கு-கிழக்கு மாகாணங்கள் மிக அவதானத்துடன் அணுகப்பட வேண்டியவையாக இருக்கின்றன. ஏனெனில், யுத்தம் நிறைவடைந்ததையடுத்து சட்டம் ஒழுங்கை பேணுவதில் வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு முன்னுரிமையளிக்கப்பட்டுள்ளது. ஏனெனில், மூன்று தசாப்த கால யுத்தத்தின்போது வடக்கிலும், கிழக்கிலும் பொலிஸ் நிலையங்கள் தாக்கப்பட்டும் பொலிஸார் கொல்லப்பட்ட சம்பவங்களும் நிகழ்ந்தன.*

*வடக்கு - கிழக்கு யுத்தம் ஆரம்பித்த காலப்பகுதிகளில் பொலிஸாரே ஆயுத பாணிகளால் முதலில் இலக்கு வைக்கப்பட்டிருந்தனர். இந்த நிலையில் கொழும்பில் மாத்திரமன்றி வெளி மாகாணங்கள், மாவட்டங்களில் குறிப்பாக, தமிழ் பேசும் சிறுபான்மை மக்கள் வாழுகின்ற பிரதேசங்களில் பொலிஸார் மிக அவதானத்துடனும் கண்ணியத்துடனும் நடந்து கொள்ள வேண்டியவர்களாகின்றனர்.*

*ஏனெனில், சிறுபான்மையினர் வாழ்கின்ற வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் சட்டம் ஒழுங்கை பேணுவதோடு மட்டுமல்லாது, சட்டம் ஒழுங்குமீதும் அதனை அமுல்படுத்துவோர் தொடர்பாகவும் மக்கள் நம்பிக்கை கொள்ளும் விதத்தில் பொலிஸார் நடந்து கொள்ள வேண்டும்.*

*ஏறாவூர் பிதேசத்தில் மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்கள் இருவர் பொலிஸார் வீதியில் விபத்தொன்று தொடர்பாக போட்டிருந்த அளவிடும் நாடா ஒன்றுக்கு மேலாக மோட்டார் சைக்கிளை செலுத்தி சென்றார்கள் என்று தெரிவித்தே கைது செய்யப்பட்டிருந்தனர். இதன்பின்னர் கைதான இளைஞர்களை பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் தமது பூட்ஸ் காலால் எட்டி உதைந்திருந்தார்.*

*இந்தச் சம்பவத்தை அருகில் நின்றவர்கள் தமது கைத்தொலைபேசியில் காணொலியாக பதிவு செய்து முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து அந்தத் தாக்குதல் சம்பவத்தோடு சம்பந்தப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் அவரின் பதவியிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.*

*கடந்த ஆண்டில் மலையகப் பகுதியில்கூட லொறி சாரதியொருவர் வீதி விதிமுறைகளை மீறினார் என்று கைது செய்யப்பட்டு அவரைக் கைது செய்த பொலிஸ்காரரால் நையப்புடைக்கப்பட்டிருந்தார்.*

*கைதான லொறி சாரதி வீதியில் வீழ்த்தப்பட்டு அவரைக் கைது செய்த பொலிஸ் கான்ஸ்டபிள் பாய்ந்து தாக்கியிருந்தார். ஏறாவூரில் இடம்பெற்ற பொலிஸ் தாக்குதலை அரசியலாக்க வேண்டாமென பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர கேட்டுக்கொண்டுள்ளார்.*

*இதேசமயம் வடக்கு - கிழக்கில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் விதத்தில் “நீறு பூத்த நெருப்பு“ போன்றிருக்கும் வடக்கு - கிழக்கு நிலவரத்தை கையாளும்போது பொலிஸாரும் மிக அவதானத்தோடு நடந்து கொள்வதை அமைச்சர் சரத் வீரசேகர உறுதி செய்ய வேண்டியவராகின்றார்.* ●

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஒக்ரோபர் - 25 திங்கட்கிழமை
பிலவ வருடம் - ஐப்பசி - 08
நல்ல நேரம் : 6.00 - 7.30
ராகு காலம் : 7.30 - 9.00
திதி : பஞ்சமி




25.10.2021

**மேடம்**
தாய் வழி உறவினர்களுடன் சந்தோஷமாக பொழுது போகும். நண்பர்களிடம் விட்டுகொடுத்து சென்று நட்பை தக்கவைப்பீர்கள். உறவினர்களுடன் இருந்த கருத்து வேறுபாடுகள் நீங்கும்.

**இடபம்**
மகிழ்ச்சி அதிகரிக்கும். நட்பு வட்டம் விரிவடையும். முதலீடுகளை ஆராய்ந்து செய்யவும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. வெளிநாடு செல்லும் வாய்ப்பு உங்களுக்கு கிடைக்கக்கூடும்.

**மிதுனம்**
குழந்தைகள் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள். பொறுப்புகள் கூடும். நீண்ட நாளாக விரும்பிய ஆடம்பரப் பொருளின் சேர்க்கை உண்டு. நீங்கள் காத்திருந்த பயணம் இப்போதைக்கு இல்லை.

**கடகம்**
கடந்த நாட்களில் இருந்த சலிப்பு நீங்கும். உற்சாகம் கூடும். வியாபாரிகளுக்கு புதிய நண்பர்களின் வருகை மகிழ்ச்சி தரும். ஆதாயம் உண்டு. கையொப்பமிடுவதில் கவனம் தேவை.

**சிம்மம்**
கலைத்துறையை சேர்ந்தவர்களின் முயற்சி ஆதாயம் தரும். வாழ்க்கைத்துணைக்கு பணி பற்றிய நல்ல செய்தி இன்று வரும். திட்டமிட்ட விஷயத்தில் சற்று காலதாமதமாக வாய்ப்பு உண்டு.

**கன்னி**
முயற்சி செய்த விஷயங்களில் ஓரளவு வெற்றி கிடைக்கும். பணியாளர்கள், மாணவர்களின் திறமை இன்று வெளிப்படும். திடீர் நன்மை உண்டு. சொத்து விஷயத்தில் கவனம் தேவை.

**துலாம்**
பணியார்களுக்கு பாராட்டு கிடைக்கும். குழந்தைகளால் பெருமிதம் வரும். புதிய மனிதர்களிடம் அதிக நெருக்கம் காட்ட வேண்டாம். இரகசியங்களை பகிர்வதால் தொல்லை ஏற்படக்கூடும்.

**விருட்சிகம்**
ஆபத்தான விஷயங்களில் தேவையில்லாமல் இறங்காதீர்கள். பாஸ்போர்ட், வீசா தொடர்பான முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். மனதிற்கு மகிழ்ச்சி தரும் விஷயம் ஒன்று நடைபெறும்.

**தனுசு**
மாணவர்கள் சிறப்பாக பாராட்டு பெறுவீர்கள். மகிழ்ச்சி கூடும். வெளிநாட்டு வியாபாரம் தொடர்பான நல்ல செய்திகள் வந்து சேரும். மனதில் தேவையற்ற கவலைகள் நெருங்க அனுமதிக்காதீர்கள்.

**மகரம்**
வெளிநாடுகளில் வசிப்பவர்களுக்கு நல்ல செய்தி வரும். நிரந்தர முதலீடுகள் செய்வது பற்றிய வெற்றி கிடைக்கும். சொத்துக்கள் வாங்குவது, விற்பதில் அவசரம் காட்ட வேண்டாம்.

**கும்பம்**
உழைப்பின் அளவுக்கு ஏற்ப நல்ல பலன் பெறுவீர்கள். முயற்சிகளில் சற்றுத் தாமதமாகவே வெற்றி கிடைக்கும். குடும்பத்தில் கடந்த சில நாட்களாக இருந்த வருத்தம் தீரும்.

**மீனம்**
மகிழ்ச்சியான நாள். பிரிந்து சென்ற நண்பருடன் நெருக்கம் உண்டாகும். பிறருக்கு உதவி செய்வீர்கள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். அக்கம் பக்கத்தினரை அனுசரித்து செல்வீர்கள். பிறரை மகிழ்வித்து மகிழ்வீர்கள்.

# கொரோனா கால கட்டுப்பாடுகள் தமிழகத்தில் பெருமளவுக்கு தளர்வு

## திரையரங்குகளில் 100வீத ரசிகர்களுக்கு அனுமதி

சென்னை, ஒக். 25

தமிழகத்தில் கொரோனா தொற்று பெருமளவுக்கு குறைவடைந்துவருவதால் அனைத்து கடைகளுக்கான நேரக்கட்டுப்பாட்டை நீக்கியுள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், நவம்பர் 1ஆம் திகதி முதல் திரையரங்குகளில் 100 சதவீத ரசிகர்களை அனுமதிக்கவும் உத்தரவிட்டுள்ளார்.

தமிழகத்தில் கொரோனா பரவலை தொடர்ந்து பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு, ஒவ்வொரு மாதமும் சூழ்நிலைக்கு ஏற்ப மாற்றி அமைக்கப்பட்டு வருகிறது. படிப்படியாக தளர்வுகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

தற்போது தளர்வுகளுடன் அமுலில் இருந்து வரும் ஊரடங்கு எதிர்வரும் 31 ஆம் திகதி காலை 6.00 மணியுடன் முடிவடைகிறது. எனவே, கொரோனா பாதிப்பின் தற்போதைய நிலையை கருத்தில் கொண்டு, அடுத்தக்கட்டமாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை செய்வதற்கான கூட்டம் முதலமைச்சர் ஸ்டாலின் தலைமையில் சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

கூட்டத்தில், தமிழகத்தில் கூடுதல் தளர்வுகள் அளிப்பது குறித்தும், ஊரடங்கு உத்தரவை மேலும் நீட்டிப்பது குறித்தும் உயர் அதிகாரிகளுடன் ஸ்டாலின் ஆலோசனை மேற்கொண்டார். தீபாவளி பண்டிகை கொண்டாட்டங்கள், பாடசாலைகள் திறப்பு, வடகிழக்கு பருவமழை காலம் ஆகிய வற்றை கருத்திற்கொண்டு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

இதன்பின்னர் ஸ்டாலின் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார். அதில் கூறப்பட்டுள்ளதாவது:-

“கொரோனா நோய்த் தொற்று பரவலை தடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில், நடைமுறையில் உள்ள தளர்வுகளுடன் கூடிய ஊரடங்கு கட்டுப்பாடுகள் 15-11-2021 வரை நீடித்து உத்தரவிடப்படுகிறது. பண்டிகை காலங்களில், பொதுமக்களின் வேண்டுகோளுக்கு இணங்கவும், அத்தியாவசிய தேவைகளுக்காகவும் மட்டுமே பல் வேறு தளர்வுகள் அளிக்கப்பட்டுள்ளன. சினிமா திரையரங்குகளில் 100 சதவீதம் ரசிகர்களுடன், நிலையான வழிகாட்டு நடைமுறைகளை பின்பற்றி செயல்பட அனுமதிக்கப்படுகிறது.

# சமூகநீதி முறையாக பின்பற்றப்படுகிறதா? கண்காணிக்க சுப. வீ. தலைமையில் குழு!


சென்னை, ஒக். 25

தமிழகத்தில் சமூகநீதி கண்காணிப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாக தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவித்துள்ளார். இதன் தலைவராக பேராசிரியர் சுப. வீரபாண்டியன் நியமிக்கப்பட்டுள்ளார்.

கல்வி, வேலைவாய்ப்பு, பதவிகள், பதவி உயர்வுகள், நியமனங்கள் ஆகியவற்றில் சமூகநீதி அளவுகோல், முறையாக முழுமையாகப் பின்பற்றப்படுகின்றனவா என்பதை இந்த குழு கண்காணிக்கும்,

இதன் தலைவராக பேராசிரியர் சுப. வீரபாண்டியன் நியமனம் செய்யப்பட்டுள்ளாரென தமிழக அரசு சார்பில் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும் இந்த குழுவின் உறுப்பினர்களை நியமனம் செய்து, முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக, தமிழக



அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பில்,

“சமூகநீதி அளவுகோலானது சட்டப்படி முழுமையாகச் செயல்படுத்தப்படுகிறதா என்பதைக் கண்காணிப்பதற்காக தமிழக அரசால் ‘சமூகநீதிக் கண்காணிப்புக் குழு’ அமைக்கப்படும் எனவும், இக்கண்காணிப்புக் குழு, கல்வி, வேலைவாய்ப்பு, பதவிகள், பதவி உயர்வுகள், நியமனங்கள் ஆகியவற்றில் சமூகநீதி அளவுகோல், முறையாக முழுமையாகப் பின்பற்றப்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்கும், வழிகாட்டும், செயல்படுத்தும் பணிகளை மேற்கொள்வதோடு, இவை சரியாக நடைமுறைப்படுத்தப்படாவிட்டால், உரிய நடவடிக்கை எடுக்க அரசுக்குப் பரிந்துரை செய்யும் எனவும், இக்குழுவில் அரசு அலுவலர்கள், கல்வியாளர்கள், சட்ட வல்லுநர்கள் இடம் பெறுவார்கள் எனவும், சமூகநீதி அரசாணையின் நூற்றாண்டு நாளினையொட்டி தமிழக முதல்வர் ஏற்கெனவே அறிவித்துள்ளார்.

அந்த அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக, பேராசிரியர் சுப.வீரபாண்டியன் தலைமையில் உறுப்பினர்களை நியமனம் செய்து, ‘சமூகநீதிக் கண்காணிப்புக் குழுவினை’ அமைத்து, முதல்வர் மு.க. ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்” எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தாதா சாகேப் பால்கே விருதை நான் எதிர்பார்க்கவேயில்லை

## இன்று விருது பெறும் ரஜினிகாந்த்

சென்னை, ஒக். 25

இந்திய சினிமாவின் மிக உயரிய விருதாகக் கருதப்படும் தாதா சாகேப் பால்கே விருதினை எதிர்பார்க்கவில்லை என்று நடிகர் ரஜினிகாந்த் தெரிவித்துள்ளார். இன்று அந்த விருதினை புதுடில்லியில் பெற்றுக்கொள்ளவிருக்கும் ரஜினிகாந்த் சென்னையில் நேற்று பத்திரிகையாளர்களிடம் பேசும் போதே இதனைத் தெரிவித்தார்.

தாதா சாகேப் பால்கே விருது, இந்திய சினிமாவின் தந்தையாக போற்றப்படும் தாதா சாகேப் பால்கே பெயரில் ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. இவ்விருதை இதுவரை லதா மங்கேஷ்கர், சத்யஜித் ரே,



அமிதாப் பச்சன் உள்ளிட்ட பலர் பெற்றுள்ளனர். தமிழ் திரையுலகிலிருந்து சிவாஜி, கே.பாலசந்தர் ஆகியோர் பெற்றுள்ளனர்.

இந்நிலையில், 2019ஆம் ஆண்டு நடிகர் ரஜினிகாந்த் துக்கு தாதா சாகேப் பால்கே விருது அறிவிக்கப்பட்டது. ஆனால் கொரோனா பரவல் காரணமாக விருது வழங்கும் நடைபெறவில்லை. தற்போது கொரோனா பரவல் குறைந்து வரும் நிலையில், இவ்விருது வழங்கும் விழா இன்று புதுடில்லியில் நடைபெறவுள்ளது.

இந்நிலையில் விருது வழங்குவது குறித்து நடிகர் ரஜினி நேற்று காலை தனது இல்லம் முன்பு செய்தியாளர்களைச் சந்தித்தார்.

“இந்த விருது எனக்குக் கிடைத்திருப்பது பெரும் மகிழ்ச்சி அளிக்கிறது. அதை நான் எதிர்பார்க்கவே இல்லை. அதே சமயத்தில் இயக்குநர் கே.பாலசந்தர் இல்லையே என்று வருத்தமாக உள்ளது” என்று கூறினார்.

# வல்வெட்டித்துறை மீனவர் புழல் சிறையில் அடைப்பு!

சென்னை, ஒக்.25

**அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டார்கள் என்ற குற்றஞ் சாட்டில் இந்திய கடற்படையினரால் பிடிக்கப்பட்ட வல்வெட்டித்துறை மீனவர்கள் இருவரும் சென்னை புழல் சிறையில் அடைக்கப்பட்டனர் என்று தெரிய வருகின்றது.**

கடந்த 21ஆம் திகதி வல்வெட்டித் துறையிலிருந்து சிறிய ரக மீன்பிடிப் படகில் மீன்பிடிக்க சென்ற மீனவர்கள் ளான நிமலதாஸ், கஜீபன் ஆகிய இருவரையும் இந்திய கடற்படையினர் பிடித்து நாகபட்டினம் கடற்படை முகாமுக்குக் கொண்டு சென்றிருந்தனர்.

பின்னர், அவர்கள் பொலிஸார் ஊடாக சென்னை எழும்பூர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டிருந்தனர்.

வழக்கை விசாரித்த நீதிபதி மீனவர்கள் இருவரையும் எதிர்வரும் முதலாம் திகதி வரை புழல் சிறையில் மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார் என்று தெரிய வருகின்றது. (ஐ)



## நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் 11ஆவது நிர்வாகி பொறுப்பேற்பு!

யாழ்ப்பாணம், ஒக். 25

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் 11ஆவது நிர்வாகியாக குமரேஷ் ஷயந்தன குமாரதாஸ் மாப்பாண முதலியார் நேற்று சம்பிரதாய முறைப்படி பொறுப்பேற்றார்.

நல்லூர் கந்தசுவாமி ஆலய பத்தாவது நிர்வாகியான குகஸ்ரீ இரகுநாத குமாரதாஸ் மாப்பாண முதலியார் கடந்த 09ஆம் திகதி இறைபாதமடைந்தார். அன்றைய நாள் தொடக்கம், அவரின் புதல்வர் குமரேஷ் ஷயந்தன குமாரதாஸ் மாப்பாண முதலியாரின் பதவிக் காலம் ஆரம்பமானது.

இந்நிலையில் நேற்றுக் காலை குமரேஷ் ஷயந்தன குமாரதாஸ் மாப்பாண முதலியார் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திற்கு சென்று விசேட பூஜை வழிப்பாட்டில் கலந்து கொண்டு சம்பிரதாய முறைப்படி பொறுப்பேற்றுக் கொண்டார்.



பத்தாவது நிர்வாகியான குகஸ்ரீ இரகுநாத குமாரதாஸ் மாப்பாண முதலியார் 1964 டிசெம்பர் 15 முதல் கடந்த 9ஆம் திகதி அவர் இறைபதமடையும் வரை அவரே நிர்வாகியாக இருந்தமை குறிப்பிடத் தக்கது. (ஐ - 03)

## தொண்டைமானாறு சூழலில் பொலிஸார் சிரமதான பணி!

வடமராட்சி, ஒக். 25

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி கோவில் சுற்றுச்சூழலில் வல்வெட்டித்துறை பொலிஸார் நேற்று ஞாயிற்றுக்கிழமை சிரமதானப் பணிகளில் ஈடுபட்டனர்.

வட மாகாண பொலிஸ் அத்தியட்சகரின் பணிப்புக்கமைய காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகரின் மேற்பார்வையில் வல்வெட்டித்துறை பொலிஸார் இந்த சிரமதானப் பணிகளில் ஈடுபட்டனர். (ஐ- 02)



## அச்சுவேலியில் பொலிஸார் விழிப்புணர்வும் சிரமதானமும்!

### கழிவு கொட்டுவோரை கைது செய்யவும் நடவடிக்கை

வடமராட்சி, ஒக். 25

மழை காலம் ஆரம்பித்துள்ள நிலையில் டெங்கிலிருந்து எம்மை பாதுகாப்போம் எனும் தொனிப் பொருளில் அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குள் பொலிஸார் நேற்று பல்வேறு இடங்களிலும் சிரமதானப் பணியில் ஈடுபட்டனர். அத்துடன் வல்லைப் பகுதிகளில் கழிவுகளை கொட்டுபவர்களை கைது செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



டெங்கு நுளம்பு பரவக்கூடிய ஏதுவான சூழல் இனங்காணப்பட்டு அவற்றை அழித்தொழிக்கும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டிருந்தனர். அச்சுவேலி வல்லை வீதி, இராச வீதி, அச்சுவேலி நகரப் பகுதிகளில் சுற்றுச்சூழல் பொலிஸாரின் ஒத்துழைப் புடன் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

எதிர்வரும் காலங்களில் அச்சுவேலிப் வல்லைப் பகுதிகளில் குப்பைகளை கொட்டும் நபர்களை கைது செய்வதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது. இதேபோல் டெங்கு நுளம்பு பரவக்கூடிய சூழலை வைத்திருக்கும் வீட்டு உரிமையாளர்களுக்கு எதிராகவும் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-02)

## கஜேந்திரன் எம்.பிக்கு கொரோனா தொற்று!

யாழ்ப்பாணம், ஒக். 25

யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரனுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையிலேயே தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

தொற்று உறுதியான தகவலை நேற்று அவர் தனது முகநூல் பதிவில் உறுதிப்படுத்தியுள்ளார்.

இதேவேளை, அவர் கடந்த வாரம் பாராளுமன்ற கூட்டத் தொடரிலும் பங்கேற்று இருந்தமை குறிப்பிடத்தக்கது.(ஐ-03)

## யாழ். மாநகர வீதிகளின் பணிகளை நவம்பருக்குள் முடிவுறுத்த பணிப்பு!

யாழ்ப்பாணம், ஒக். 25

'ஐ றோட்' திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டு வரும் யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட 17 வீதிகளின் புனரமைப்பு பணிகளை துரிதப்படுத்த முதல்வர் வி. மணிவண்ணன் பணிப்புரை விடுத்துள்ளார்.

இது தொடர்பான கலந்துரையாடல் கடந்த 22ஆம் திகதி யாழ் மாநகர சபையில் முதல்வர் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் "ஐ றோட்" திட்ட அதிகாரிகள் தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபையின் திட்டப் பணிப்பாளர் உட்பட அதிகாரிகள், யாழ். மாநகர சபை பொறியியலாளர், வீதி புனரமைப்பு மற்றும் நீர் வழங்கல் பணிகளை மேற்கொண்டு வரும் ஒப்பந்த நிறுவன அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்படி, பிறவுண் வீதியை எதிர்வரும் நவம்பர் 10ஆம் திகதிக்கு முன்னரும், ஏனைய வீதிகளை நவம்பர் மாத இறுதிக்குள்ளும் நிறைவுறுத்தி தருவது என்றும் ஒப்பந்தகாரர்களினால் உத்தரவாதம் அளிக்கப்பட்டது. எனினும், வாய்க்கால் புனரமைப்பு, நீர் குழாய்கள் பதித்தல் உட்பட அனைத்து பணிகளும் முடிவுறுத்தப்பட்டு குறித்த வீதிகள் அனைத்தும் அடுத்த ஆண்டில் மாநகர சபையிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்படவும் இணக்கம் காணப்பட்டது. (ஐ - 03)

## குமரதாஸ் மாப்பாணர் நினைவாக 92 பனம் விதைகள் நாட்டப்பட்டன

யாழ்ப்பாணம், ஒக். 25

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் 10ஆவது நிர்வாகியான குகஸ்ரீ இரகுநாத குமாரதாஸ் மாப்பாண முதலியார் நினைவாக 92 பனை வித்துக்கள் செம்மணி பகுதியில் நேற்று நாட்டப்பட்டன.

நல்லூர் சைவத் தமிழ் பண்பாட்டு கலைக்கூடத்தினரின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட இந்த நிகழ்வில், குமாரதாஸ் மாப்பாண முதலியார் 92ஆவது வயதில் இறைபதம் எய்தியமையை குறிக்கும் விதமாகவே இந்த பனை வித்துக்கள் நாட்டப்பட்டன.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், யாழ்ப்பாண பிரதேச செயலர், நல்லூர் பிரதேச செயலர் யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளர், ஆலய நிர்வாகத்தினர் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

யாழ்ப்பான கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கும் முகமாக செம்மணி நல்லூர் ஆலய வரவேற்பு வளைவிற்கு அண்மையில் வீதியின் இரு மருங்கிலும் பனம் விதைகள் நாட்டப்பட்டன. (ஐ)






# மண் அகழ்வை நிறுத்துமாறு மருதங்கேணியில் கவனவீர்ப்பு!

## விவசாயிகள் நேற்று நடத்தினர்

வடமராட்சி, ஒக். 25

**விவசாய நிலங்களில் மண் அகழ்வு, கண்டல் தாவரங்கள் அழிப்பு, உவர்நீர் உட்புகுதல் காரணமாக வயல் நிலங்கள் உவராதலுக்கு பிரதேச செயலர், அரசியல்வாதிகளே காரணம் என்று தெரிவித்து மருதங்கேணி விவசாயிகளால் கவனவீர்ப்பு போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது.**

மருதங்கேணி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட வடமராட்சி கிழக்கு, நாகர் கோவில் தெற்கு, குடாரப்பு கிராமத்தில் விவசாய நிலங்கள், தனியாருக்குச் சொந்தமான காணிகளில் சட்டவிரோதமாகவும், அனுமதி வழங்கப்பட்டும் மண் அகழ்வு இடம்பெற்று வருகிறது.

மருதங்கேணி பிரதேச செயலகத்தால் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு மண் அகழ்வு திட்டமிட்ட வகையில் இடம்பெறுகிறது. இவை அரச காணிகள் அல்ல எனவும் தனியாருக்குச் சொந்தமான தோட்டக்காணிகளாகும். இதனை கவனத்தில் கொள்ளாது மருதங்கேணி பிரதேச செயலாளர் அனுமதிப் பத்திரத்தை வழங்கியுள்ளார்.

இதற்கு அரசியல்வாதிகள் சிலரும் உடந்தை என போராட்டக்காரர்கள் குற்றம் சுமத்துகின்றனர். இங்கு மண் அகழ்வால் பெரும் கிடங்குகள் ஏற்பட்டு நீர் தேங்குகிறது. இதனால், மழை காலங்களில் தமது கால் நடைகளுக்கான மேய்ச்சல் தரையாக பயன்படும் பகுதியும் அழிவடைகின்றது.

காலபோக காலத்தில் வன்னி நிலப்பரப்புகளில் உள்ள பெருமளவான கால்நடைகளுக்கு இந்த மேய்ச்சல் தரைகளே ஆதாரம் எனவும் இவர்கள் தெரிவிக்கின்றனர். அத்துடன், இந்தக் காணிகள் பெருமளவில் மண் அகழப்பட்டு அருகில் உள்ள அணைகளால் உவர் நீர் விவசாய நிலங்களுக்குள் உட்புந்து வயல் நிலங்கள் உவராகி வயல் விதைப்புக்களை செய்ய முடியாது கைவிட்டுள்ளனர்.

எனவே, தமது விவசாய நிலங்களை பாதுகாக்குமாறும், மேய்ச்சல் தரைகளை இல்லா தொழிக்கும் இந்தத் திட்டத்தை உடன் கைவிடுமாறு விவசாயிகள் கவனவீர்ப்பு போராட்டத்தின் மூலம் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-02-03)

## கசிப்பு காய்ச்சிய நபர் கிளிநொச்சியில் கைது!

கிளிநொச்சி, ஒக். 25

கிளிநொச்சியில் சூட்சுமமான முறையில் கசிப்பு காய்ச்சிய ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டார். அவரிடம் இருந்து 14 பரல் கசிப்பும் வேறு பொருட்கள் பலவும் கைப்பற்றப்பட்டன.

நேற்று அதிகாலை 2 மணியளவில் விசேட அதிரடிப் படையினர் பெரியகுளம் - கட்டைக் காட்டில் நடத்திய சுற்றிவளைப்பிலேயே இந்த கசிப்பு உற்பத்தி நிலையம் சிக்கியது.

குளத்தின் கரையோர பகுதியில் இரகசியமான முறையில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையமே இவ்வாறு பிடிபட்டது. இதன்போது, கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டிருந்த நிலையில் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

அவரிடமிருந்து 14 பெரல்களில் கசிப்பு உற்பத்திக்கு தயாரான நிலையில் காணப்பட்ட 1620 லீற்றர் கோடாவையும் கசிப்பு வடித்து கொண்டிருந்த 540 லீற்றர் கோடாவையும் வடித்த நிலையில் காணப்பட்ட 120 லீற்றர் கசிப்பும், கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தும் உபகரணங்களையும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் கைப்பற்றினர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் கட்டைக்காட்டை சேர்ந்த 33 வயதான குடும்பஸ்தராவார். இந்த நபர் கிளிநொச்சியில் பல இடங்களுக்கும் கசிப்பை விநியோகம் செய்து வந்திருந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)



# கேள்வியால் எழுந்த தர்க்கமே வாள்வெட்டுக்கு காரணமாம்!

## பொலிஸாரிடம் இளைஞர் வாக்குமூலம்

யாழ்ப்பணம், ஒக். 25

எனது வீட்டுக்கு கல்வீசியது நீங்களா என்று கேட்டதைத் தொடர்ந்து எழுந்த தர்க்கமே கோப்பாய் - பூதர்மடம் வாள் வெட்டு சம்பவத்துக்கு காரணம் என்று கைது செய்யப்பட்ட இளைஞர் பொலிஸாரிடம் வாக்குமூலம் கொடுத்துள்ளார்.

கோப்பாய் - பூதர்மடம் பகுதியில் கடந்த 21ஆம் திகதி இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவம் தொடர்பில் 3 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

கடந்த 21ஆம் திகதி 11 பேர் கொண்ட கும்பல் வீடு ஒன்றுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தியது. இதில், 58 வயது நபர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில், வீட்டின் யன்னல் கண்ணாடிகள், ஹைஏஸ் வாகனத்தின் கண்ணாடி, மோட்டார் சைக்கிள் என்பனவும் அடித்துடைக்கப்பட்டன.

இது தொடர்பில் விசாரணை நடத்திய பொலிஸார் தாக்குதல் இடம்பெற்ற வீட்டின் அயலில் வசித்த இளைஞரை கைது செய்தது. அவரிடம் நடந்த விசாரணையிலேயே, தனது வீட்டுக்கு கல்வீச்சு நடத்தப்பட்டது தொடர்பில் படுகாயமடைந்த நபர் கேள்வி எழுப்பினார் என்றும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட தர்க்கத்தாலேயே இந்த தாக்குதல் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதலை நடத்திய சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று பேர் கைது செய்யப்பட்ட நிலையில், தலைமறைவான 9 பேரை கோப்பாய் பொலிஸார் தேடி வருகின்றனர். (ஐ)



## யாழ்ப்பாணம் மாநகரில் பொலிஸார் சிரமதானம்!

யாழ்ப்பாணம், ஒக். 25

யாழ்ப்பாணம் மாநகரப் பகுதியிலும் நேற்று பொலிஸார் சிரமதானப் பணிகளில் ஈடுபட்டனர்.

யாழ். பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உஜித் லியனகேயின் வழிகாட்டுதலில் யாழ்ப்பாண பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரான்சிஸ் தலைமையிலான பொலிஸ் அணியினர் இந்த சிரமதானப் பணிகளில் ஈடுபட்டனர்.

இந்த சிரமதானப் பணிகளில் யாழ்ப்பாணம் மாநகர சபையின் சுகாதார பகுதியினரும் ஒத்துழைப்பு வழங்கினர். (ஐ-03)

## மாகாணங்களுக்கு இடையிலான பஸ் சேவைகள் இன்று ஆரம்பம்!

வடமராட்சி, ஒக். 25

பருத்தித்துறை பேருந்து நிலையத்திலிருந்து மாகாணங்களுக்கு இடையிலான இ. போ. ச. பஸ் சேவைகள் இன்று திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகின்றது என்று பருத்தித்துறை முகாமையாளர் தெரிவித்தார்.

பருத்தித்துறையிலிருந்து கொழும்பு, திருகோணமலை, அக்கரைப்பற்று ஆகிய இடங்களுக்கு பகல்நேர பஸ் சேவைகள் முதற்கட்டமாக இடம்பெறும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை வடக்கு மாகாணத்துக்குள் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய தூரஇடங்களுக்கான பஸ் சேவைகள் ஏற்கனவே நடைபெற்று வருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ- 02)

## வெளிமாவட்ட ஊழியர்களுக்காக அத்தியாவசிய தூர சேவை ஆரம்பம்!

### தடுப்பூசி அட்டை அவசியம்

யாழ்ப்பணம், ஒக். 25

வெளிமாவட்டங்களில் பணியாற்றும் உத்தியோகத்தர்களுக்காக இலங்கை போக்குவரத்து சபை (இ. போ. ச.) அத்தியாவசிய தூர சேவைகளை ஆரம்பித்துள்ளது.

இந்தத் தகவலை இ. போ. ச. வட பிராந்திய முகாமையாளர் செ. குலபாலசெல்வம் அறியத் தந்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில்,

மட்டுப்படுத்தப்பட்ட அளவில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த சேவையை பயன்படுத்தும் அனைத்து உத்தியோகத்தர் களும் சமூக இடைவெளியை பேணுவதுடன், இரு தடுப்பூசிகளும் செலுத்தப் பட்டமைக் கான ஆதார அட்டையையும் கொண்டுவருவது பயணத்தின் போது ஏற்படும் வீண் சிரமங் களை தவிக்க உதவும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ஐ)

# உர தட்டுப்பாட்டை நீக்குமாறு மன்னாரில் இன்று போராட்டம்!

மன்னார், ஒக். 25

**மன்னார் மாவட்டத்தை சேர்ந்த 174 கமக்கார அமைப்புகளை உள்ளடக்கிய மன்னார் மாவட்ட விவசாய சம்மேளனத்தினர் இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு மாபெரும் அறவழிப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.**

இந்தப் போராட்டமானது மன்னார் - உயிலங்குளம் கமநல சேவைத் திணைக்களத்தின் முன்பாக இடம்பெறவுள்ளது.

"தற்போது கால போக நெற்செய்கை ஆரம்பித்துள்ளது. அரசின் திட்டமிடாத நடவடிக்கை காரணமாக இந்த நாட்டில் பெரும் உரத்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

அரசாங்கம் உடனடியாக விவசாயிகளுக்கு உரத்தை வழங்குமாறு கோரி நடைபெறவுள்ள இந்த போராட்டத்துக்கு அனைத்து விவசாயிகளையும் அன்புடன் அழைத்து நிற்கின்றோம்" என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற இ. சார்ள்ஸ் நிர்மலநாதன் அறைகூவல் விடுத்துள்ளார். (ஐ)



# பல்கலைக்கழக மாணவர்கள் தடுப்பூசி செலுத்த பின்னடிப்பு

## மருத்துவர் சத்தியலிங்கம்

வவுனியா, ஒக். 25

பல்கலைக்கழக மாணவர்கள் கொரோனா தடுப்பூசி பெறுவதில் அக்கறையற்ற நிலையில் காணப்படுகின்றனர் என்று வவுனியா பல்கலைக்கழகத்தின் மருத்துவர் ப. சத்தியலிங்கம் தெரிவித்தார்.

சமூக செயல்பாட்டாளர் காசிநாதர் ஜெயராஜாவின் அஞ்சலி நிகழ்வி உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், வவுனியா பல்கலைக்கழகத்தில் அண்மையில் பல்கலைக்கழக மாணவர்களுக்கான கொரோனா தடுப்பூசி ஏற்றும் பணி முன்னெடுக்கப்பட்டது.

எனினும், தடுப்பூசி பெறுவதில் பலரும் அக்கறை காட்டியதாகத் தெரியவில்லை. பைசர் தடுப்பூசியா செலுத்துகின்றனர் எனக் கேள்வி எழுப்பினார்களே தவிர, சினோபார்ம் ஊசி என்றவுடன் பின்னடித்தனர்.

உலக சுகாதார ஸ்தாபனத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட 6 தடுப்பூசிகளில் சினோபார்மும் உள்ளடங்குகின்றது. எனவே, பல நாடுகளுக்கு செல்வதற்கான அனுமதி சினோபார்ம் ஊசி ஏற்றியவர்களுக்கும் அனுமதி உண்டு. எனினும், அதனை சிலர் உணர்கின்றதாக தெரியவில்லை.

தடுப்பூசி பெற்றவர்களின் இறப்பு வீதம் குறைவாக உள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றது. எனவே, பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு தடுப்பூசியை பெற ஆர்வம் காட்டவேண்டும் - என்று கூறினார். (ஐ)

# சமூக விரோத செயல்களில் ஈடுபடும் இளைஞரை கட்டுப்படுத்த நடவடிக்கை

வவுனியா, ஒக். 25

வவுனியா பூந்தோட்டம் சந்தியில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் சமூகவிரோத செயல்பாடுகளை கட்டுப்படுத்துவது தொடர்பில் பூந்தோட்டம் கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது,

பூந்தோட்டம் சந்தியில் ஒன்று கூடும் சில இளைஞர்களால் அந்தப் பகுதி பொதுமக்கள் பல அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

மதுபோதையில் நிற்கும் அவர்கள் பெண்களுடன் அநாகரிமான முறையில் நடந்துகொள் வதுடன், தகாத வார்த்தைகளையும் பயன்படுத்துகின்றனர் என்று மக்கள் குற்றஞ்சாட்டினர்.

அத்துடன், வவுனியா நகருக்கு தொழிலுக்கு சென்றுவிட்டு வீடு திரும்பும் பலரிடம் அவர்கள், வழிப்பறியில் ஈடுபடுவதுடன் வம்புக்கு இழுக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த இளைஞர்களை கட்டுப்படுத்த பொலிஸாரின் உதவியை நாடவும், இது குறித்து வட மாகாண சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர், மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோரிடம் முறைப்பாடு செய்யவும் முடிவு எடுக்கப்பட்டது. (ஐ)

# வவுனியாவிலிருந்து இன்றுமுதல் மாகாணங்களிடையே பஸ் சேவை!

வவுனியா, ஒக். 25

வவுனியாவில் இருந்து வெளி மாகாணங்களுக்கான பஸ் சேவைகள் இன்று திங்கட்கிழமை காலை முதல் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் மற்றும் அத்தியாவசிய தொழில் புரிவோரின் வசதி கருதி குறித்த பஸ் சேவைகள் வவுனியா புதிய பஸ் நிலையத்தில் இருந்து ஆரம்பிக்கப்படவுள்ளன.

அந்தவகையில் காலை 05.45 மணிக்கு இ.போ.ச வவுனியா சாலையின் பஸ் வவுனியாவிலிருந்து கண்டி நோக்கி புறப்படவுள்ளது. காலை 06.30 மணிக்கு வவுனியாவிலிருந்து திருகோணமலை நோக்கி புறப்படவுள்ளது.

காலை 07.30 மணிக்கு வவுனியாவிலிருந்து அக்கரைப்பற்று நோக்கியும், காலை 07.00 மணிக்கு கொழும்பு நோக்கியும் பஸ்கள் புறப்படவுள்ளன.

குறித்த பஸ்களில் பயணிப்போர் அத்தியாவசிய சேவைக்குரிய அடையாள அட்டையை காண்பித்து பயணிக்க முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# மந்துவிலில் வாள்கள் மீட்பு

தென்மராட்சி, ஒக். 25

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மந்துவில் மேற்கு பகுதியில் பாழடைந்த வீடொன்றில் இருந்து வாள் உள்ளிட்ட ஆயுதங்கள் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டன.

இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில் இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப் பின்போது வாள் மற்றும் ஆபத்து விளைவிக்கக்கூடிய இரண்டு கைக் கோடரிகள் ஆகியன மீட்கப்பட்டுள்ளன.

இருப்பினும் சந்தேக நபர்கள் தப்பித்துச் சென்றுள்ளனர். மீட்கப்பட்ட ஆயுதங்களை இராணுவத்தினர் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ள நிலையில் மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ -02)

# தொற்றுக்கு மூதாட்டி பலி!

யாழ்ப்பாணம், ஒக். 25

வவுனியாவில் உயிரிழந்த ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்திய சாலையில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் உயிரிழந்த பெண்ணுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது. சுப்ரமணியம் பிரம்பா (வயது -73) என்ற மூதாட்டி இவ்வாறு தொற்றால் மரணமடைந்தார். (ஐ)

# இராணுவ 'பிக்கப்' மோதியதில் வவுனியா இளைஞர் படுகாயம்!

வவுனியா, ஒக். 25

இராணுவ 'பிக்கப்' வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதிய விபத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்து வவுனியா பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்று மதியம் இடம்பெற்ற இந்த விபத்து வவுனியா நகரப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

வவுனியா மணிக்கூட்டு கோபுர சந்தியில் இருந்து புகையிரத வீதி நோக்கி மோட்டர் சைக்கிள் சென்று கொண்டிருந்த போது, மக்கள் வங்கி முன்பாக நின்ற இராணுவ 'பிக்கப் ' வாகனம் வீதியில் திடீரென திரும்ப முற்பட்டது.

இதன்போது மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானது. இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞரே படுகாயமடைந்தார்.

விபத்துக் குறித்து வவுனியா பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ)

# இளம் குடும்ப பெண் வவுனியாவில் கடத்தல்!

வவுனியா, ஒக். 25

வவுனியா, தேக்கவத்தையில் இளம் குடும்ப பெண் ஒருவர் கடத்தப்பட்டாரென பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தேக்கவத்தையை சேர்ந்த பெரும்பான்மை இனத்தவரான 19 வயது ஆணும், மல்லாவியை சேர்ந்த 18 வயது தமிழ் யுவதியும் காதலித்து கடந்த ஜூலை மாதம் திருமண பந்தத்தில் இணைந்து ஒன்றாக வாழ்ந்தனர்

இந்த நிலையில், கடந்த வெள்ளிக்கிழமை வானில் வந்த சிலர் வீட்டிலிருந்தவர்களை தாக்கி விட்டு பெண்ணை கொண்டு சென்றனர்.

இந்த நிலையில் பெண்ணின் கணவர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (ஐ)

# 10 கிலோ கஞ்சாவுடன் 18 வயது நபர் கைது!

மன்னார், ஒக். 25

மன்னார் - தாழ்வுபாடு கிராமத்தில் ஒரு தொகுதி கேரள கஞ்சா பொதிகளுடன் 18 வயது இளைஞர் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மன்னார் பொலிஸ் விசேட புலனாய்வு பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், இந்த நபர் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து 10 கிலோ 370 கிராம் கஞ்சாவும் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பண்டுள்ள வீரசிங்கவின் பணிப்பில், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் விதானகே, தலைமையிலான பொலிஸ் குழுவினரின் நடவடிக்கையிலேயே இந்தக் கைது இடம்பெற்றது. சந்தேகநபரை மன்னார் நீதி வான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# மாவிட்டபுரத்தில் திருக்குறள் வளாகம்!

யாழ்ப்பாணம், ஒக்.25

யாழ்ப்பாணம் மாவிட்டபுரத்தில் சிவபூமி திருக்குறள் வளாகம் நிர்மாணிக்கப்படவுள்ளது. இதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.

அடிக்கல் நாட்டும் நிகழ்வு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர், ஆறு. திருமுருகனின் தலைமையில் இன்று முற்பகல் 10.00 மணியளவில் இடம்பெறவுள்ளது.

இலங்கை சிவபூமி அறக்கட்டளையின் ஏற்பாட்டில் இந்தப் பணி ஆரம்பிக்கப்படவுள்ளது. மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகக் கொண்டவரும் அவுஸ்ரேலியாவில் வாழ்பவருமான மருத்துவர் கமலாகரனின் உதவியில் இந்தப் பணி நடைபெறுகிறது.

மாவிட்டபுரத்தில் அமையவுள்ள திருக்குறள் வளாகத்தில், திருக்குறள் முழுவதும் காட்சிப்படுத்தப்படும். அத்துடன் ஆய்வு நூலகம், திருக்குறள் ஆய்வரங்கம், தியான நிலையம் என்பவும் அங்கு நிறுவப்படவுள்ளன. (ஐ)

## கூட்டமைப்பு;



தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட போது...

# இரு தசாப்த ஏற்றமும் இறக்கமும்!

**1940** இற்குப் பின்னரான இலங்கைத் தமிழர் அரசியலில் முதலில் தோற்றம் பெற்ற அரசியல் கட்சி ஜி.ஜி. பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ். 1944 ஒகஸ்ட் மாதம் இக்கட்சி அதிகாரபூர்வமாக பதிவு செய்யப்பட்டது. இக்கட்சியின் கொள்கை தமிழ்த் தேசியம் என்று அன்றே பதிவிடப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் இக்கட்சியில் அங்கம் வகித்த எஸ்.ஜே.வி.செல்வநாயகம், சி.வன்னியசிங்கம், செனட்டர் ஈ.எம்.வி. நாகநாதன் ஆகியோர் பிரிந்து சென்று 1949ஆம் ஆண்டில் தமிழ் அரசுக் கட்சியை ஆரம்பித்தனர். இதனை சமஷ்டிக் கட்சி என்றும் அழைத்தனர்.

ஆனால், 1972இல் இவ்விரு கட்சிகளும் காலத்தின் தேவை கருதி, தொண்டமானின் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸையும் இணைத்து தமிழர் ஐக்கிய முன்னணியை உருவாக்கின.

1976இல் இந்த முன்னணி, தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியாக மாறியபோது, தொண்டமான் நியாயமான காரணத்தைக் கூறி அதிலிருந்து விலகினார். வடக்கும் கிழக்கும் இணைந்த தனிநாட்டுக் கொள்கைக்கு தமது மலையகம் அதன் புவியியல் அமைப்பு ரீதியாக சேர்ந்திருக்க முடியாதென்பதே தொண்டமான் கூறிய காரணம்.

எனினும், 1977ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் தொண்டமான் தமது தார்மீக ஆதரவை கூட்டணிக்கு வழங்கினார். வடக்கு, கிழக்கில் சூரியன் உதிக்கும்போது மலையகத்தில் சேவல் கூவும் என்பது இவரது அறிவிப்பாக அமைந்தது. (கூட்டணியின் சின்னம் உதயசூரியன், தொண்டமானின் தொழிலாளர் காங்கிரஸின் சின்னம் சேவல்).

இதன் அடுத்த கட்டமாக, 2001ஆம் ஆண்டு ஒக்ரோபரில் உருவான தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, இலங்கைத் தமிழர் அரசியல் வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமைந்ததோடு சிங்கள தேசத்தையும் நிமிர்ந்து பார்க்க வைத்தது.

இந்த மாதத்தின் மூன்றாவது வாரம் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உருவாகி இரு தசாப்தங்கள் (இருபது ஆண்டுகள்) முடிவடைந்துள்ள வேளையில், அதன் ஆரம்பம், செல்நெறி, நிகழ்காலப் போக்கு என்பவைகளை மீள்பார்வை செய்ய வேண்டிய தேவை எழுந்துள்ளது.

போராளியாக அறிமுகமாகி ஊடகவியலாளராக மிளிர்ந்த தராக்கியின் (தர்மரட்ணம் சிவராம்) பங்கு இதன் உருவாக்கத்தில் அதிமுக்கியமானது. கனடிய தலைநகரான ஒட்டாவாவில் இடம்பெற்ற தமிழர் தேசிய மாநாடு ஒன்றில் பங்குபற்றிய தராக்கியுடன், ஒரே வாகனத்தில் ரொறன்ரோவரை இப்பத்தி எழுத்தாளர் பயணம் செய்தவேளை இதுபற்றிய வரலாற்றினை அவர் சொல்லக் கேட்க முடிந்தது.

2005ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28ஆம் திகதி தராக்கியை கொன்றொழித்திருக்காவிட்டால், கூட்டமைப்பின் தோற்றுவாய் உட்பட்ட வரலாற்றுக்கு அவரே நிகழ்காலச் சாட்சியாக இருந்திருப்பார். கூட்டமைப்பை விடுதலைப் புலிகள் உருவாக்கவில்லையென்று கூறுபவர்களுக்கும், கூட்டமைப்பை விடுதலைப் புலிகள் உருவாக்கியது தமக்குத் தெரியாதென்று கை விரிப்பவருக்கும் தராக்கி நேர்நின்று சாட்டையடி கொடுத்திருப்பார்.

2001ஆம் ஆண்டு பொதுத்தேர்தலின் போது கூட்டமைப்பை பின்னால் நின்று உருவாக்கியது விடுதலைப் புலிகள் என்பது அதை ஏற்றுக் கொள்ள விரும்பாதவர்களது வாதம். கூட்டமைப்பு உருவாக்கப்பட்டபோது அதில் அங்கம் வகித்த தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியே மூத்த அரசியல் கட்சியாக இருந்ததால், அதனுடைய சின்னமான உதயசூரியனில் அத்தேர்தலைச் சந்திக்க இணக்கம் காணப்பட்டது.

2001ஆம் ஆண்டுத் தேர்தலில் வடக்கிலும் கிழக்கிலுமாக 348,146 வாக்குகளைப் பெற்ற கூட்டமைப்பு பதினைந்து ஆசனங்களைப் பெற்றது. 2002இல் விடுதலைப் புலிகளும் ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சியும் சமாதான பேச்சு ஒப்பந்தம் கைச்சாத்திட்டதையடுத்து, விடுதலைப் புலிகளின் அரசியல் வகிபாகம் முக்கியத்துவம் பெற்றது.

**பனங்காட்டான்**

இந்த வகையில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பகிரங்கமாக விடுதலைப் புலிகளின் அரசியல் வடிவமானது. இதனை ஏற்றுக் கொள்ளாத கூட்டணியின் தலைவர் வி.ஆனந்தசங்கரி அதன் தேர்தல் சின்னமான உதயசூரியனை கூட்டமைப்பு தொடர்ந்து பயன்படுத்த மறுத்ததோடு கூட்டமைப்பிலிருந்து விலகிக் கொண்டார்.

2004ஆம் ஆண்டுத் தேர்தலின்போது கூட்டமைப்புக்குள்ளிருந்து விலகிய கூட்டணியின் வெற்றிடத்தை தமிழ் அரசுக் கட்சி நிரப்பியது. இதனால் தமிழரசுக் கட்சியின் வீடு சின்னம் கூட்டமைப்பின் தேர்தல் சின்னமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதேசமயம் கூட்டமைப்பு என்பது சர்வதேசத்தின் அங்கீகாரத்தைப் பெற்றது.

"விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏகதலைமை" என்று பாராளுமன்றத்திலும் பொதுவெளியிலும் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் கூறலாயினர். வன்னியிலிருந்து அழைப்பு வந்தபோதெல்லாம் ஒட்டுமொத்தமாக கூட்டமைப்பினர் சென்று ஆலோசனைகள் பெற்று இயங்கினர். இச்சந்திப்புகளுக்கு இரா.சம்பந்தன் சென்று வந்தார்.

2004ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலின்போது விடுதலைப் புலிகள் கூட்டமைப்பை மக்கள் இயக்கமாக மாற்ற விரும்பி அதற்கேற்றவாறு அபேட்சகர்களை நியமித்தனர். கூட்டமைப்பில் இடம்பெற்ற அரசியல் அமைப்புகளுக்கு வழங்கப்பட்ட எண்ணிக்கைக்கு நிகராக பொது அமைப்புகளின் பிரதிநிதிகளையும் வேட்பாளர்களாக நியமித்தனர்.

மாணவர் - இளையோர் அமைப்பு, மகளிர் அமைப்பு, கடற்றொழிலாளர் அமைப்பு, போக்குவரத்துத்துறைசார் அமைப்பு, பனம்பொருள் உற்பத்தியாளர் அமைப்பு, ஊடகவியலாளர் - கல்வியாளர் - சமூகப்பணியாளர் பிரிவுகள் என்ற வகையில் அந்தத் தெரிவு இடம்பெற்றது.

2004ஆம் ஆண்டுத் தேர்தலில் வெற்றி பெற்ற 22 பேரும் மொத்தமாக 633,654 வாக்குகளைப் பெற்றனர். இதுவே கூட்டமைப்பு இதுவரை பெற்ற ஆகக்கூடிய வாக்குகள் என்பது குறிப்பிடத்தக்கது.

2001 பொதுத்தேர்தலில் எவருமே பொது அமைப்புகளைச் சார்ந்தவர்களாக இருக்கவில்லை. ஆனால், 2004 பொதுத் தேர்தல் வெற்றி மாறுபட்டதாக அமைந்தது. வெற்றிபெற்ற 22 பேரில் ஐம்பது வீதமானோர் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள். கே.சிவநேசன், பத்மினி சிதம்பரநாதன், செல்வராஜா கஜேந்திரன், சொலமன் சிறில், சதாசிவம் கனகரத்தினம், கே. பத்மநாதன், தோமஸ் வில்லியம், தங்கேஸ்வரி கதிரமன், தமன்பிள்ளை கனகசபை, எஸ்.ஜெயானந்தமூர்த்தி, பி. அரியநேந்திரன் ஆகியோர் இவர்கள். (இவர்களில் சிலர் அடுத்த தேர்தலில் வெவ்வேறு கட்சிகளில் இணைந்து கொண்டனர்).

இந்தத் தேர்தல் முடிவு கூட்டமைப்பில் முக்கியத்துவம் பெற்றிருந்த தமிழ் அரசுக் கட்சிக்கு திருப்தியைக் கொடுக்கவில்லை. அதுமட்டுமன்றி சில கட்சிகளை கூட்டமைப்பிலிருந்து அவர்களைத் தாமாகவே வெளியேற வைக்கும் சூழ்ச்சியையும் மேற்கொண்டு தமிழ் அரசுக் கட்சி வெற்றி கண்டது.

2009 முள்ளிவாய்க்கால் போர் உறைநிலைக்குச் சென்ற காலம்வரை அடக்கியும் அடங்கியும் இயங்கிய தமிழரசுக் கட்சி, அதன் பின்னர் "கட்டாக்காலி" அரசியலை முன்னெடுத்தது. இதற்கு இரண்டு உதாரணங்களைக் கூற முடியும்.

2009வரை கூட்டமைப்புக்கு தலைவரென எவருமே நியமிக்கப்படவில்லை. பாராளுமன்ற அமர்வின் தேவைக்காக மட்டும் இதன் பாராளுமன்ற குழுத் தலைவராக திருமலை எம்.பி. இரா. சம்பந்தன் நியமிக்கப்பட்டார்.

2009வரை கூட்டமைப்புக்கு பேச்சாளர் எவரும் இருக்கவில்லை. அதனை விடுதலைப் புலிகள் சிந்திக்கவும் இல்லை. கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் தங்கள் தங்கள் பணிகளை தாமே கவனித்துக் கொண்டன. ஆனால், 2010இல் தேசியப் பட்டியல் வழியாக நுழைந்த சுமந்திரனை அதன் பேச்சாளராக சம்பந்தன் நியமித்து ஆசீர்வதித்தார்.

2010 தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர் தமிழ்க் காங்கிரஸ் கட்சியும், அதனைத் தொடர்ந்து ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பும் கூட்டமைப்பிலிருந்து வெளியேறின (வெளியேறும் சூழ்நிலை திட்டமிட்டு உருவாக்கப்பட்டது). இதிலிருந்து கூட்டமைப்பின் கீழிறக்கம் ஆரம்பமானது. விடுதலைப் புலிகளால் ஆரம்பத்திலிருந்தே ஒதுக்கி வைக்கப்பட்ட புளொட்டை கூட்டமைப்பு உள்வாங்கிக் கொண்டது அடுத்த கட்டம். 2010ஆம் ஆண்டின் பின்னர் படிப்படியாக சரிவு நிலைக்குச் சென்ற கூட்டமைப்பு இறுதியாக இடம்பெற்ற 2020 தேர்தலில் 10 ஆசனங்களை மட்டுமே வெற்றி கண்டது. கூட்டமைப்பின் தலைவரென அழைக்கப்படும் இரா. சம்பந்தனின் மேலாதிக்க மடாதிபதி நிலை அரசியல் போக்கும், பேச்சாளரான சுமந்திரனின் தன்னாதிக்க அரசியல் செயல்பாடுமே இன்று அதன் உட்பூசல்களை அதிகரிக்க வைத்துள்ளது.

இவ்விடத்தில் சம்பந்தனின் தமிழீழ அரசியல் தடத்தை திரும்பிப் பார்க்க வேண்டும். 1977ஆம் ஆண்டுத் தேர்தலிலேயே இவர் முதன்முறையாக திருமலையில் வெற்றி பெற்றார். ஆனால், 1989, 1994ஆம் ஆண்டுத் தேர்தல்களில் இவரால் வெற்றிபெற முடியவில்லை. 1994ஆம் ஆண்டுத் தேர்தலில் வெற்றி பெற்ற அ.தங்கத்துரை 1997இல் காலமானதையடுத்து அந்த வெற்றிடத்துக்கு இவர் நியமனமானார். ஆனால், 2000ஆம் ஆண்டுத் தேர்தலில் மீண்டும் தோல்வியையே தழுவினார்.

2001ஆம் ஆண்டில் கூட்டமைப்பினூடாகவே இவரால் திருமலையில் வெற்றி பெற முடிந்தது. இதனைத் தொடர்ந்து அடுத்தடுத்த தேர்தல்களிலும் வெற்றி பெற்றாராயினும், 2020ஆம் ஆண்டுத் தேர்தலில் அருந்தப்பில் வெற்றி பெற்றார். திருமலை மாவட்டத்தில் வெற்றி பெற்ற மற்றைய கட்சிகளின் மூன்று உறுப்பினர்களுக்கு அடுத்ததாக நான்காவது இடத்தில் 21,422 வாக்குகளை மட்டுமே இவரால் பெற முடிந்தது.

கூட்டமைப்பின் இரு தசாப்த ஏற்றமும் இறக்கமும் பற்றி எழுதுவதற்கு இன்னும் நிறைய விடயமுண்டு. ஆனால், இப்பத்தியின் விரிவஞ்சி, இன்னொரு சந்தர்ப்பத்தில் அவைகளை எழுத விரும்புகிறேன்.

விடுதலைப் புலிகள் உருவாக்கிய தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தமிழ் மக்களின் தலைமை அணியாக அறுகுபோல் வேரூன்றி, ஆல்போல் விழுதெறிந்து தமிழ்த் தேசியத்தின் அரணாக இயங்குகிறதா? அல்லது, கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக போகிறதா? இதற்கான பதில் கூட்டமைப்பினரும் தமிழ் மக்களும் நன்கறிந்தது. ■

# டெல்டா பிளஸ் புதிய கொரோனா திரிபு; வேகமாக பரவ கூடியதாக இருக்கலாம்



கொரோனா வைரசின் புதிய திரிபை சிலர் "டெல்டா பிளஸ்" என்று அழைக்கிறார்கள். அத்திரிபு வழக்கமான டெல்டா திரிபை விட எளிதாக பரவக்கூடியதாக இருக்கலாம் என பிரிட்டனைச் சேர்ந்த நிபுணர்கள் தற்போது கூறுகின்றனர்.

யூகே ஹெல்த் செக்யுரிட்டி ஏஜென்சி எனப்படும் சுகாதார பாதுகாப்பு அமைப்பு, இத்திரிபை "ஆய்வில் உள்ள திரிபு" என வகைப்படுத்தியுள்ளது.

இந்த புதிய டெல்டா பிளஸ் திரிபு ஏற்கனவே உள்ள திரிபுகளைவிட அதிக பாதிப்பை ஏற்படுத்தும் என சொல்வதற்கு ஆதாரம் இதுவரை இல்லை. தற்போது பயன்பாட்டில் இருக்கும் கொரோனா தடுப்பூசிகளே, இந்த திரிபுக்கு எதிராகவும் சிறப்பாக வேலை செய்யும் என விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

பிரிட்டனில் ஏற்படும் கொரோனா தொற்றில் வழக்கமான டெல்டா திரிபால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. தற்போது டெல்டா பிளஸ் அல்லது AY.4.2 என்றழைக்கப்படும் இந்த திரிபால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

ஒட்டுமொத்த கொரோனா பாதிப்புகளில் ஆறு சதவீதம் பேர் இந்த திரிபால் பாதிக்கப்பட்டிருப்பதாக சமீப கால அதிகாரபூர்வ தரவுகள் கூறுகின்றன.

பிரிட்டனின் டெல்டா திரிபை விட, டெல்டா பிளஸ் திரிபின் பரவும் விகிதம் அதிகமாக இருப்பதாக சில ஆரம்பகட்ட ஆதாரங்கள் கிடைத்திருப்பதாக அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இதெல்லாம் ஒரு பக்கம் இருக்க, டெல்டா திரிபைப் போல, டெல்டா ப்ளஸ் திரிபு கவலைக்குரிய திரிபு வகைகளில் ஒன்றாக கருதப்படவில்லை. இது தான் கொரோனா திரிபுகளின் ஆபத்தை பொறுத்து வழங்கப்படும் படி நிலைகளில் உச்சபட்சமானது என்பது குறிப்பிடத்தக்கது.

உலக அளவில் பல கொரோனா திரிபுகள் உள்ளன. வைரஸ் பிறழ்வு எப்போதுமே வழக்கமாக நடக்கும் ஒன்று தான், எனவே புதிய திரிபைக் காண்பதில் ஆச்சர்யம் ஒன்றும் இல்லை.

கொரோனா பெருந்தொற்று தொடங்கியதிலிருந்தே Y145H மற்றும் A222V பிறழ்வுகள் பல்வேறு கொரோனா துணைவரிசைகளில் காணப்பட்டன.

தற்போது இருக்கும் கொரோனா வைரசின் பல்வேறு திரிபுகளுக்கு எதிராக, புதிய கொரோனா தடுப்பூசி மேம்பாடு தொடர்பாக எந்த வித பரிந்துரைகளும் இல்லை.

"எல்லா கொரோனா திரிபுகளுக்கும் ஒரே மாதிரியான பொது சுகாதார அறிவுரைகள்தான் வழங்கப்படுகின்றன. யார் எல்லாம் தடுப்பூசி செலுத்திக் கொள்ள தகுதியானவர்களோ, அவர்கள் எல்லாம் கொரோனா தடுப்பூசி செலுத்திக் கொள்ளுங்கள், உங்களுக்கு எப்போது பூஸ்டர் டோஸ் செலுத்திக்கொள்ள அழைப்பு விடுக்கப்படுகிறதோ, அப்போது முன்வந்து பூஸ்டர் டோஸை செலுத்திக் கொள்ளுங்கள்" என பிரிட்டனின் சுகாதார பாதுகாப்பு முகமையின் மருத்துவர் ஜென்னி ஹாரிஸ் கூறியுள்ளார்.

"எப்போதும் எச்சரிக்கையோடு இருங்கள். மக்கள் நெருக்கமாக இருக்கும் இடங்களில் முகக்கவசம் அணிந்து கொள்ளுங்கள், மற்றவர்களை உள் அரங்குகளில் சந்திக்கும் போது காற்றோட்டத்துக்காக யன்னல் கதவுகளை திறந்துவிடுங்கள். கொரோனா அறிகுறிகள் இருந்தால் பி.சி.ஆர். சோதனை செய்து கொள்ளுங்கள், நெகட்டிவ் என சோதனை முடிவு கிடைக்கும் வரை சுயமாக தனிமைப்படுத்திக் கொள்ளுங்கள்" - என்கிறார் ஜென்னி.

**மிஷெல் ராபர்ட்ஸ்**

---

# பிரிட்டனில் குளிர்கால பகுதியில் புதிய வைரஸ் அலை எதிர்பார்ப்பு!

உலகில் கொரோனா வைரஸ் பரவத் தொடங்கி இரண்டு ஆண்டுகள் நிறைவடைகின்ற நிலையிலும் அதன் மாறுபாடடைந்த திரிபுகள் தொடர்ந்தும் தலையெடுத்து வருகின்றன.

ஐரோப்பாவில் வைரஸ் பரவலுக்குச் சாதகமான குளிர்கால நிலை தொடங்குவதால் வரும் நாட்களில் தொற்றாளர்கள் எண்ணிக்கை உயரக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பிரிட்டனில் கடந்த ஒரு வார காலமாகத் தினசரி தொற்றாளர்களது எண்ணிக்கை நாற்பது ஆயிரத்துக்கு மேல் பதிவாகி உள்ளது. கடைசியாக நேற்று அந்த எண்ணிக்கை 49,139 ஆக உயர்ந்துள்ளது.

பிரிட்டிஷ் சுகாதார அமைச்சர் சஜித் ஜேவிட் (Sajid Javid) பிரதமரின் டவுணிங் வீதி அலுவலகத்தில் இன்று நடத்திய செய்தியாளர் சந்திப்பின் போது நாடு குளிர்காலத்தில் புதியதொரு தொற்று அலையைச் சந்திக்கும் என்ற எச்சரிக்கையை விடுத்தார். பனிக் காலத்தில் ஒரு நாள் தொற்று ஒரு இலட்சம் வரை அதிகரிக்கக் கூடும் என்று எதிர்பார்ப்பதாக அவர் தெரிவித்தார்.

பனிக் காலப்பகுதியில் முன்னெடுக்க வேண்டிய மாற்று சுகாதாரத் திட்டம் ஒன்றை (Covid Plan B)பிரிட்டிஷ் அதிகாரிகள் தயாரித்து வருகின்றனர். மாஸ்க், சமூக இடைவெளி போன்ற விதிகளை மற்றொரு தடவை இறுக்கமாக நடைமுறைப்படுத்துவது உட்பட பல வழிமுறைகள் அதில் அடங்கியுள்ளன.

அமெரிக்கத் தயாரிப்பான வைரஸ் எதிர்ப்பு மாத்திரைகளைப் (antiviral molnupiravir) பயன்படுத்தித் தொற்றாளர்களுக்குச் சிகிச்சை அளிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அடுத்த மாதம் முதல் இந்த மாத்திரைகள் விநியோகிக்கப்படவுள்ளன என்று அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தொற்றாளர் எண்ணிக்கை 50 ஆயிரம் வரை உயர்ந்துள்ள போதிலும் கடந்த குளிர்காலப் பகுதியில் நிகழ்ந்தமை போன்று உயிரிழப்புகள் இன்னமும் அதிகரிக்கவில்லை. தடுப்பூசிகள் நன்கு செயற்படுவதையே இது காட்டுகின்றது என்று அமைச்சர் சஜித் ஜேவிட் சுட்டிக்காட்டினார்.

இந்தியாவில் கண்டறியப்பட்ட டெல்ரா வைரஸ் திரிபின் இன்னொரு வடிவமே தற்சமயம் பிரிட்டனில் பரவிவருவதாகக் கூறப்படுகிறது.

பிரதமர் பொறிஸ் ஜோன்சன் சமூக இடைவெளி உட்பட சகல கட்டுப்பாடுகளையும் நீக்குகின்ற அறிவிப்பை "Freedom Day" என்ற பெயருடன் கடந்த ஜூலை 19 ஆம் திகதி அறிவித்திருந்தார். அதன் பிறகு நாடு முழுவதும் முழுமையான இயல்பு நிலை போன்று கட்டுப்பாடற்ற தன்மை காணப்பட்டது.



**குமாரதாஸன்**

பிரான்ஸுடன் ஒப்பிடும் போது பிரிட்டனிலும் சனத் தொகையில் 73 வீதமானவர்கள் குறைந்தது ஒரு தடுப்பூசியையாவது பெற்றுள்ளனர். ஆயினும் அங்கு தொடர்ந்தும் தொற்றாளர்களது எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. பிரான்ஸில் நாளாந்த தொற்றுக்கள் 4ஆயிரத்து 500 ஆக உள்ள நிலையில் பிரிட்டனில் அது பத்து மடங்கு அதிகமாகக் காணப்படுகிறது.

ஐரோப்பாவில் வைரஸ் தடுப்பூசி ஏற்றும் முன்னெடுப்புகளை முதலில் ஆரம்பித்த நாடு பிரிட்டனே ஆகும். ஆனால், சொந்த தயாரிப்பாகிய அஸ்ராஸெனகா தடுப்பூசியின் எதிர்ப்புத் திறன், ஏனைய பைஸர் போன்ற மெசஞ்சர் ஆர்.என்.ஏ. தடுப்பூசிகளது திறனை விடக் குறைவானது என்பது ஆய்வுகளில் தெரியவந்திருந்தது.

புதிய திரிபுகளின் தொற்றை எதிர்ப்பதில் அஸ்ராஸெனகா தடுப்பூசியின் செயற்திறன் குறைவாக இருப்பதால் மூன்றாவது ஊக்கித் தடுப்பூசி ஏற்றும் திட்டமும் அங்கு முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - II
விடைகள்

நேரம் : 45 நிமிடம்

கல்வி tv CHANNEL

2. எதையும் ஆராய்ந்து செய்

7) 1. குடிப்போம் 2. இருந்தன

3. கிளறின 4. நடைபெறும்

8) 1. தயவு செய்து வெளியே போ

2. நான் ஒரு பேனை வைத்திருக்கின்றேன்

9) I will clean the class room

10) 1. w 2. r

11) மம நான்ன

12) நான் பாடம் படிக்கிறேன்


13) பொருத்தமான வாக்கியங்களுக்கு 2 புள்ளிகள் வீதம் வழங்குக

14) 1. ஐந்தாயிரத்து அறுபத்தேழு

2. XX

3. 105

4.



5. 14

6. 15

7. 394

8. 658

9. 582

10. 117 மீதி 4

11. 1248, 1636, 4672, 6701

12. 2

13. 2

14. 4

15. 2

16. 2

17. 2

18. 2

19. 2

20. 4

21. 6

22. 4

23. 1

24. 1

25. 1

26. 3

27. 3

28. 4

29. 1

30. 1

31. 3

32. 1

33. 2

34. 3

35. 3

36. 1

37. 2

38. 2

39. 1

40. 4

41. 4

42. 2

# மூன்று அமைச்சுகளுக்கு ஊடாக உரம், கிருமிநாசினி இறக்குமதி!

## பெருந்தோட்ட பயிர்களுக்கானவைக்கே அனுமதி!

கொழும்பு, ஒக். 25

**இறக்குமதி செய்யப்படும் உரம் அவசியம் என உறுதிப்படுத்தப்பட்ட பயிர்ச் செய்கைகளுக்கு தேவையான உரம் மற்றும் கிருமி நாசினிகளை மூன்று அமைச்சுக்கள் ஊடாக இறக்குமதி செய்ய விவசாயத்துறை அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.**

இதற்கமைய தேயிலை மற்றும் தெங்கு உட்பட பெருந்தோட்ட பயிர்ச் செய்கைக்கு தேவையான உரத்தை பெற்றுக் கொள்வதற்கான அறிவுறுத்தல் மற்றும் அனுமதி பத்திரம் வழங்கும் பொறுப்பு பெருந்தோட்ட அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளது.

சுற்றுலாத்துறை சேவை கைத்தொழிலுக்கு அவசியமான பூக்கள் உட்பட அதுனுடன் தொடர்புடைய பயிர்ச் செய்கைக்கு தேவையான அனுமதி பத்திரத்தை விநியோகிக்கும் அதிகாரம் சுற்றுலாத்துறை அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளது. நீர்மூலமான பயிர்ச் செய்கை, வளியை அடிப்படையாகக் கொண்ட பயிர்ச் செய்கை ஆகியவற்றுக்கு தேவையான உர இறக்குமதிக்கான அனுமதிப்பத்திரம் விவசாயத்துறை அமைச்சின் ஊடாக விநியோகிக்கப்படும்.

பெரும்போக விவசாய நடவடிக்கைகளுக்கு தேவையான சிறந்த உரத்தை வழங்குமாறு கோரிக்கையை முன்வைத்து விவசாயிகள் நாடு தழுவிய ரீதியில் தொடர் போராட்டத்தில் ஈடுப்பட்டு வருகிறார்கள். சேதன பசளையையும், அரசாங்கம் தற்போது வழங்கும் திரவ நைதரசன் கிருமி நாசினியையும் பயன்படுத்தும் முறைமை எமக்கு தெரியாது. ஆகவே இரசாயன உரத்தை தமக்கு பெற்றுத்தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

பெரும்போகத்திற்கு தேவையான சேதன பசளை உரம் மற்றும் திரவ நைதரசன் கிருமிநாசினிகள் நாடு தழுவிய ரீதியில் உள்ள அனைத்து விவசாய திணைக்களங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. ஆகவே, விவசாயிகள் பெரும்போக விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவது அவசியம் என்று விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)



## நடிகை விஷாகா காலமானார்!

குருநாகல், ஒக். 25

நாட்டின் முன்னணி நடிகை விஷாகா சிறிவர்த்தன காலமானார். இறக்கும் போது அவருக்கு 64 வயது.

உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டு குருநாகல் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே அவர் உயிரிழந்தார்.

அவர் அனுராதா திரைப் படத்தின் மூலம் இலங்கை சினிமாவில் நுழைந்தார். சனா சன்னா மா, சுரா துதியோ, சசர சேதனா மற்றும் சண்ட மதலா ஆகியவை அவரது நடிப்பு வாழ்க்கையில் அவர் பங்களித்த பல அங்கீகாரம் பெற்ற படைப்புகளில் அடங்கும். (ஐ)

# அச்சிடப்பட்ட ரூ. 130,000 கோடியில் ரூ. 6,400 கோடியை ஒதுக்க முடியாதா?

## அரசாங்கத்தை கேட்கிறது ஜே. வி. பி.

கொழும்பு, ஒக். 25

அநாவசிய செலவுகளுக்காக அரசாங்கம் கடந்த 16 மாதங்களில் ஒரு இலட்சத்து 30 ஆயிரம் கோடி நாணயத் தாள்களை அச்சிட்டுள்ளது. இவ்வாறிருக்கையில் அதிபர் - ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டை தீர்ப்பதற்கு 6 ஆயிரத்து 400 கோடி ரூபாயை அரசாங்கத்தால் ஒதுக்க முடியாதா? என்று மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) கேள்வியெழுப்பியுள்ளது.

சமையல் எரிவாயுவின் விலையை 1,257 ரூபாயால் அதிகரித்துள்ள அரசாங்கம் அதிபர் - ஆசிரியர்களுக்கு 1,250 ரூபாயால் மாதாந்த சம்பளத்தை அதிகரிப்பதற்கான யோசனையை முன்வைக்கின்றது. அதிபர் - ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டை தீர்ப்பதற்கு பதிலாக மாணவர்களின் கல்வியை எண்ணி அரசாங்கம் முதலைக் கண்ணீர் வடிக்கிறது என்றும் ஜே.வி.பி. சுட்டிக்காட்டியது.

நேற்று முன்தினம் அந்தக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் அதன் தலைவர் அநுர குமார திஸநாயக்க செய்தியாளர்களை சந்தித்தபோதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், அதிபர் - ஆசிரியர்களால் நியாயமான கோரிக்கையை முன்வைத்தே போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது. எனினும் அவர்களின் கோரிக்கைக்கு நியாயமான தீர்வை வழங்குவதில் அரசாங்கம் மந்த போக்குடன் செயற்படுகிறது. சுபோதினி அறிக்கையின் பரிந்துரைகளில் மூன்றில் ஒரு பகுதியை முதற்கட்ட தீர்வாக பெற்றுக்கொள்ள அதிபர் - ஆசிரியர்கள் தீர்மானித்துள்ள போதிலும், அரசாங்கம் அந்த மூன்றில் ஒன்றையும் இரண்டு பகுதிகளாகவே வழங்க முடியும் என்று கூறுகின்றது.

அவ்வாறு செய்வதன் மூலம் அதிபர் - ஆசிரியர்களுக்கு



வெறும் 1250 ரூபாய் சம்பள அதிகரிப்பு மாத்திரமே கிடைக்கப் பெறும். ஆனால் சமையல் எரிவாயுவின் விலை 1257 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது. கடந்த 16 மாதங்களில் அரசாங்கத்தினால் ஒரு இலட்சத்து 30 ஆயிரம் கோடி ரூபாய் நாணயத்தாள்கள் அச்சிடப்பட்டுள்ளன. வாராந்தம் சுமார் இரண்டாயிரம் கோடி ரூபாய் நாணயத்தாள்களை அச்சிடும் அரசாங்கத்திற்கு ஏன் அதிபர் - ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டுக்கு தீர்வை வழங்க முடியாது?- என்றார். (ஐ)

# நைதரசன் உர இறக்குமதியில் 29 கோடி ரூபாய் நிதி மோசடி!

## எதிர்க்கட்சி தலைவர் சஜித் சாடல்

கொழும்பு, ஒக். 25

திரவ நனோ நைதரசன் உர இறக்குமதி மூலம் பெரும் நிதிமோசடி இடம்பெற்றிருக்கின்றது. இரு நாடுகளுக்கு இடையிலான கொடுக்கல், வாங்கல்களின்போது ஒரு நாட்டிலிருந்து மற்றைய நாட்டின் அரசாங்கத்திற்கோ அல்லது அரசுக்கோ சொந்தமான கூட்டமைப்பிற்கோ நிதி மாற்றம் செய்யப்படுவது ஏற்றுக்கொள்ளத்தக்க விடயமாகும். ஆனால், இந்த விவகாரத்தில் 29 கோடி ரூபாய் பணம் தனியார் கணக்கொன்றுக்கு மாற்றப்பட்டிருக்கின்றது. யாருடைய உத்தரவின் பேரில் இவ்வாறு நிதி மாற்றம் செய்யப்பட்டது? இத்தகைய பெரும்மோசடியில் ஈடுபடுவதற்காகத்தான் இரசாயன உர இறக்குமதி இடைநிறுத்தப்பட்டதா? என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேள்வி எழுப்பியுள்ளார்.

அதுமாத்திரமன்றி இந்த விவகாரம் தொடர்பில் உடனடியாக சுயாதீன விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.



ஐக்கிய மக்கள் சக்தியால் முன்னெடுக்கப்பட்டுவரும் "கொவி ஹதகெஸ்ம" செயற்திட்டத்தின்கீழ் திஸ்ஸமஹாராமையில் மக்களை சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், நாடளாவிய ரீதியிலுள்ள விவசாயிகள் கடந்தகால நிலைவரங்களையும் தற்போதைய நிலைமையையும் ஒப்பீடு செய்து பார்க்கவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கின்றது. தமது தலைவிதி இப்போது எவ்வாறு மாற்றப்பட்டிருக்கின்றது? என்பது குறித்து விவசாயிகள் சிந்தித்துப் பார்க்கவேண்டும் - என்றார்.

# தனிமைப்படுத்தல் விதி மீறல் நேற்றுமுன்தினம் 32 பேர் கைது!

கொழும்பு, ஒக். 25

சுகாதார அமைச்சால் பிறப்பிக்கப்பட்ட தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டில் நேற்று காலை 6.00 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணிநேரப் பகுதியில் 32 பேர் கைது செய்யப்பட்டனர்.

தனிமைப்படுத்தல் சட்ட மீறலின்கீழ் 2020 ஒக்ரோபர் 30 முதல் இதுவரையான காலப் பகுதியில் மொத்தம் 81 ஆயிரத்து 288 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை மேல் மாகாணத்தின் எல்லைகளில் அமைக்கப்பட்டுள்ள 13 உள் நுழையும் மற்றும் வெளியேறும் சோதனை சாவடிகளில் நேற்று முன்தினம் மொத்தமாக 2,013 வாகனங்களில் பயணித்த 3,468 நபர்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இவர்களில் உரிய காரணமின்றி மாகாண எல்லைகளை கடக்க முயன்ற 235 வாகனங்களில் பயணித்த 576 நபர்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# 948 பேர் கைது

கொழும்பு, ஒக். 25

மேல் மாகாணத்தில் நேற்று முனதினம் நடத்தப்பட்ட சிறப்பு நடவடிக்கையின்போது பல்வேறு குற்றங்களுடன் தொடர்புடைய 948 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை இடம்பெற்ற சிறப்பு நடவடிக்கையிலேயே இந்த கைதுகள் இடம்பெற்றுள்ளன.

இவ்வாறு கைதானவர்களில் 398 சந்தேக நபர்கள் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட குற்றவாளிகளாவர். ஏனைய 405 பேர் பல்வேறு குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடையவர்கள். (ஐ)

# இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தவிசாளர் பதவி நீக்கப்பட்டார்!

கொழும்பு, ஒக். 25

வடமேல் மாகாண ஆளுநர் ராஜா கொல்லுரே இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தவிசாளர் பதவியிலிருந்து உடன் அமுலுக்கு வரும் வகையில் நீக்கப்பட்டுள்ளார்.

கட்சித் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற மத்திய செயல் குழு கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கட்சியின் அரசியல் குழுவால் கொண்டுவரப்பட்ட யோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கமைய, ராஜா கொல்லுரே தவிசாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். இவர் அதிபர் ஆசிரியர்களின் நவம்பர் மாத சம்பளத்தை நிறுத்தப் போவதாகக் கூறியமையே இதற்குக் காரணம் என்று கூறப்படுகின்றது. (ஐ)



விமான, தரை படைகள், பொலிஸ் இணைந்து நடத்திய நடவடிக்கை!

## போதைபொருள் கடத்தல் குழு தலைவர் டைரா கைதானார்!

போகோடா, ஒக். 25

தரைப்படை, விமானப் படை, காவல்துறை இணைந்து நடத்திய கூட்டு நடவடிக்கையில் கொலம்பியாவில் அதிதீவிரமாகத் தேடப்பட்டு வந்த போதைப்பொருள் கடத்தல்காரர் மற்றும் அந்நாட்டின் மிகப் பெரிய சட்டவிரோத செயல்களை செய்யும் குழுவின் தலைவர் டைரோ அன்ரோனியோ உசுகா சனிக்கிழமை கைது செய்யப்பட்டார்.

டைரோ, வட மேற்கு கொலம்பியாவில் பனாமா நாட்டு எல்லையில் உள்ள அன்டியோகுயா மாகாணத்தில் அவரின் பதுங்கிடத்தில் இருந்தபோதே பிடிபட்டார்.

50 வயதான டைரோவைப் பிடிக்க இதுவரை ஆயிரக்கணக்கான அதிகாரிகளைக் கொண்டு பல நடவடிக்கைகள் நடத்தப்பட்டன. ஆனால், இப்போதுதான் சிக்கியுள்ளார். டைரோவை கொலம்பியாவின் ஆயுதமேந்திய படையினர் சூழ, கையில் விலங்கிட்டு பாதுகாப்பாக அழைத்து வருவது போன்ற படத்தை வெளியிட்டுள்ளனர்.

இவரைப் பற்றி தகவல் கொடுப்போருக்கு எட்டு இலட்சம் அமெரிக்க டொலர் பரிசுத் தொகை வழங்கப்படும் என்று அந்த நாட்டு அரசாங்கம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவோ இவர் தலைக்கு 50 இலட்சம் டொலரை பரிசுத் தொகையாக அறிவித்திருந்தது. டைரோ கைது செய்யப்பட்டமை குறித்து கொலம்பியாவின் அதிபர் இவான் டுகேவே தொலைக்காட்சியில் ஒரு காணொலி செய்தியில் தன் பாராட்டுக்களைத் தெரிவித்தார். (ஐ)




## பிக்காசோவின் 11 ஓவியங்கள் 2,200 கோடி ரூபாய்க்கு ஏலம்!

நியூயோர்க், ஒக். 25

இரு தசாப்தங்களுக்கு மேலாக அமெரிக்காவின் லொஸ் வேகாஸ் ஹோட்டலில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த பாப்லோ பிக்காசோவின் 11 ஓவியங்கள் 110 மில்லியன் டொலர்களுக்கு - 2,200 கோடி இலங்கை ரூபாய்க்கு ஏலத்தில் விற்கப்பட்டது.

சனிக்கிழமை அமெரிக்காவின் பெல்லாஜியோ ஹோட்டலில் இடம்பெற்ற ஏலத்தில், 1973இல் இறந்த ஸ்பானியரான பிக்காசோவின், 9 ஓவியங்கள், இரு பீங்கான் துண்டுகள் இடம்பெற்றன.

1938ஆம் ஆண்டு இந்த ஓவியங்கள் வரையப்பட்டன. 20 - 30 மில்லியன் டொலர்களுக்கு விற்கப்பனையாகலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அவர் வரைந்த காதலர்களின் ஓவியம் மட்டுமே அதிகபட்சமாக 40 மில்லியன் டொலர்களுக்கு - சுமார் 800 கோடி ரூபாய்க்கு ஏலம் போனது. (ஐ)

அமெரிக்கா, ஜேர்மனி, பிரான்ஸ் உட்பட

# 10 நாடுகளின் தூதுவர்களை வெளியேற்ற துருக்கி முயற்சி

இஸ்தான்புல், ஒக். 25

அமெரிக்கா, கனடா ஜேர்மனி, பிரான்ஸ் உள்ளிட்ட 10 நாடுகளின் தூதர்களை வெளியேற்ற துருக்கி முயற்சிகளை மேற்கொண்டு வருவது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த முயற்சியின் ஓர் அங்கமாக அமெரிக்கா, கனடா, பிரான்ஸ், பின்லாந்து, டென்மார்க், ஜேர்மனி, நெதர்லாந்து, நியூசிலாந்து நோர்வே, சுவீடன் ஆகிய நாடுகளில் துதர்களை வரவேற்கப்படாத நபர்களாக அறிவிக்க துருக்கி ஜனாதிபதி தாயிப் ஏர்டோகன் உத்தரவிட்டுள்ளார்.

வரவேற்கப்படாத நபர்கள் என்பது சம்பந்தப்பட்டவர்களின் இராஜதந்திர அந்தஸ்தை நீக்கக் கூடியதாகும். இவ்வாறு நீக்கப்பட்டால் அவர்கள் நாட்டை விட்டு வெளியேற்றப்படலாம் அல்லது அந்நாட்டு தூதர்களாக அங்கீகரிக்கப்படாமல் போகலாம்.



துருக்கி செயல்பாட்டாளரான ஒஸ்மான் கவலாவை தடுப்புக் காவலில் இருந்து விடுதலை செய்யுமாறு அமெரிக்கா, கனடா, பிரான்ஸ், பின்லாந்து, டென்மார்க், ஜேர்மனி, நெதர்லாந்து, நியூசிலாந்து நோர்வே, சுவீடன் ஆகிய 10 நாடுகளில் துதர்கள் கூட்டறிக்கை மூலம் கோரிக்கை விடுத்தனர்.

இதனால் ஏற்பட்ட ஆத்திரம் காரணமாகவே அவர்களின் இராதந்திர அந்தஸ்தை நீக்கும் வகையிலான உத்தரவை துருக்கி ஜனாதிபதி தாயிப் ஏர்டோகன் விடுத்துள்ளார்.

அரசுக்கு எதிரான போராட்டங்களில் ஈடுபட்டமை மற்றும் ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியில் ஈடுபட்டமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் கீழ் நான்கு ஆண்டுகளுக்கு மேல் கவலா சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். எனினும் அவர்மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டு தண்டனை விதிக்கப்பட வில்லை.

இந்நிலையிலேயே 10 நாடுகள் இணைந்து கவலாவை விடுவிக்குமாறு வலியுறுத்தி கடந்த வாரம் கூட்டறிக்கையை வெளியிட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மாணவர்களின் பாட சுமையை குறைப்பதற்கு சீனாவில் சட்டம்!

பீஜிங், ஒக். 25

மாணவர்களின் வீட்டுப் பாடச் சுமையைக் குறைத்து, அவர்களின் இணை பாடவிதான செயல்பாடுகளை ஊக்குவிக்கும் வகையில் புதிய சட்டத்தை சீனா நிறைவேற்றியுள்ளது.

2022 ஜனவரி -01 முதல் இந்த சட்டம் அமலுக்கு வருகிறது. அதிக அளவிலான வீட்டுப்பாடமும், பாடசாலைக்கு வேறான பிரத்தியேக வகுப்புக்களும் மாணவர்களுக்கு இரு மடங்கு நெருக்கடியை அளிப்பதாக சீனா கூறியுள்ளது.

அவற்றைக் குறைப்பதே புதிய சட்டத்தின் சட்டத்தின் நோக்கம். பிள்ளைகள் போதுமான ஓய்வு பெறவும், உடற்பயிற்சி செய்யவும் நேரம் ஒதுக்கப்படுவதை பெற்றோர் உறுதிசெய்யவேண்டும் என சீன அரசு தெரிவித்துள்ளது.

சீனாவில் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை பிரபல பாடசாலைகள் அல்லது தனியார் கல்வி நிறுவனங்களில் சேர்ப்பதற்காக பெரும் தொகையை செலவழிக்கிறார்கள். இது அவர்களை நிதி நெருக்கடிக்குள் தள்ளுவதுடன், மாணவர்களின் ஆரோக்கியத்தையும் பாதிக்கிறது என்பதையும் கருத்தில் கொண்டு புதிய சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.

இதேவேளை, சீனாவில் சிறுவர்கள் கணனி மற்றும் கைத்தொலைபேசிகளில் ஒன்லைன் விளையாட்டுகளில் ஈடுபட வாரத்தில் 3 மணி நேரங்கள் மட்டுமே அனுமதி வழங்கி சீன அரசாங்கம் செப்ரெம்பர் முதல் கட்டுப்பாடுகள் நடைமுறைக்கு வந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அல்ஹைடாவின் மூத்த தலைவர் சிரிய தாக்குதலில் உயிரிழப்பு!

வாஷிங்டன், ஒக். 25

வடமேற்கு சிரியாவில் கடந்த வெள்ளிக்கிழமை நடத்தப்பட்ட வான்வழித் தாக்குதலில் அல்ஹைடா அமைப்பின் மூத்த தலைவர் அப்துல் ஹமீது அல்-மதார் கொல்லப்பட்டாரெனஅமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அமெரிக்க படைகளின் மத்திய தலைமையக செய்தித் தொடர்பாளர் ஜான் ரிக்ஸ்பீ, “ஆளில்லா விமானம் மூலம் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது”, என்று கூறினார்.

அல்-மதார் கொல்லப்பட்டதன் மூலம் மேலும் பல அப்பாவி மக்களின் உயிருக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் சதித் திட்டங்களை சிரியாவிலும் சிரியாவுக்கு வெளியிலும் அல்ஹைடா மேற்கொள்வதற்கு இடையூறு விளைவிக்கும் மேலும், அல்ஹைடாவின் தாக்குதல் திறனைக் குறைக்கும் என்று ஜான் ரிக்ஸ்பீ கூறினார். (ஐ)

## டெல்டா பிளஸ் எளிதில் பரவும் இயல்புடையது!

இங்கிலாந்து நிபுணர்கள் எச்சரிக்கை

லண்டன், ஒக். 25

AY.4.2 - “டெல்டா பிளஸ்” என்று அழைக்கப்படும் கோவிட்-19 வைரஸின் புதிய திரிபு வடிவம் வழமையான டெல்டாவை விட எளிதாக பரவக்கூடியது என்று இங்கிலாந்து நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இங்கிலாந்தில் கண்காணிக்கப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்ட புதிய 'AY.4.2" என்ற டெல்டா மாறுபாட்டின் புதிய பிறழ்ந்த வடிவம் ”டெல்டா பிளஸ்” என்று அழைக்கப்பட்டது.

தற்போது அது VUI-21OCT-01 என இங்கிலாந்து சுகாதாரப் பாதுகாப்பு நிறுவனத்தினால் (UKHSA) பெயரிடப்பட்டுள்ளது.

இது ஆதிக்கம் செலுத்தும் டெல்டா வகையைவிட மிக வேகமாக பரவியதற்கான சான்றுகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன், சமீபத்திய நாட்களில் அதிக ஆய்வுக்கும் உட்படுத்தப்பட்டுள்ளது. (ஐ)



## தாய்வான் விவகாரத்தில் சமரசத்துக்கு இடமில்லை!

அமெரிக்காவுக்கு சீனா பதில்!

பீஜிங், ஒக். 25

தாய்வான் விவகாரத்தில் தாங்கள் ஒருபோதும் சமரசம் செய்து கொள்ளப்போவதில்லை என்று சீனாதிட்டவட்டமாககத் தெரிவித்துள்ளது.

சீனாவிடமிருந்து தாய்வானை அமெரிக்கா பாதுகாக்கும் என்று ஜனாதிபதி பைடன் கூறியமைக்கு பதிலடி கொடுக்கும் வகையில், சீன வெளியுறவுத் துறை அமைச்சகம் இவ்வாறு கூறியுள்ளது.

இதுகுறித்து அமைச்சக செய்தித் தொடர்பாளர் சாகோ லிஜியன் கூறுகையில், ‘சீனாவின் இறையாண்மை, எல்லைப் பாதுகாப்பு மற்றும் நலன்களைப் பொருத்தவரை சமரசத்துக்கோ, சலுகைகளுக்கோ கொஞ்சமும் இடமில்லை.

தாய்வான் தீவு சீனாவின் பிரிக்க முடியாத அங்கமாகும். தாய்வான் பிராந்தியத்துக்கும் எங்களுக்கும் இடையிலான பிரச்னை உள்நாட்டுப் பிரச்னையாகும். இதில் வெளிநாடுகள் தலையீடு செய்வதை சீனா ஒருபோதும் அனுமதிக்காது’ என்றார்.

ஈழநாடு



# சுருண்டது மே. இ. தீவுகள்; இங்கிலாந்து அபார வெற்றி!




டுபாய், ஒக். 25

அடில ரசீத்தின் அற்புதமான பந்துவீச்சால் 55 ஓட்டங்களுக்குள் மேற்கிந்தியத் தீவுகளை ஆட்டமிழக்க செய்த இங்கிலாந்து 6 விக்கெட்களால் அபார வெற்றி பெற்றது.

இருபது - 20 உலகக் கிண்ணத் தொடரில் சுப்பர் 12 தொடர் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஆரம்பமானது. இதில், பொலார்ட் தலைமையிலான மேற்கிந்தியத்தீவுகள் மற்றும் இயன் மோர்கன் தலைமையிலான இங்கிலாந்து அணிகள் மோதின.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து, முதலில் துடுப்பெடுத்தாடும் வாய்ப்பை மேற்கிந்தியத்தீவுகளுக்கு வழங்கியது.

இந்த போட்டி மேற்கிந்தியத் தீவுகளின் திறமைக்கும், இங்கிலாந்து அணியினரின் அற்புதமான பந்துவீச்சுக்கும் இடையே பலத்த யுத்தமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அதற்கமைய, 14.2 ஓவர்களில் 55 ஓட்டங்களுக்குள் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது மேற்கிந்தியா.

பந்து வீச்சில் அசத்திய அடில் ரசீத் 4 விக்கெட்களையும், மொய்ன் அலி மற்றும் டைமல் மில்ஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்களையும், கிறிஸ் வோக்ஸ் மற்றும் கிறிஸ் ஜோர்தன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

56 ஓட்டங்கள் என்ற இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து 8.2 ஓவர்களில் 4 விக்கெட்களை இழந்து வெற்றி பெற்றது. ஜசன் ரோய் 11, ஜொனி பெயர்ஸ்ரோ 9, மொயின் அலி 3, லிவிங்ரன் ஓர் ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

தொடக்கம் கொடுத்தவர்களுள் ஒருவரான ஜோஸ் பட்லர் 24 ஓட்டங்களுடனும், இயன் மோர்கன் ஓர் ஓட்டத்துடனும் ஆட்டமிழக்காதிருந்து அணியின் வெற்றியை உறுதிபடுத்தினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக மொயின் அலி தெரிவானார். (ஐ)



## லிஹிரு - லிற்றன் மோதல்!

சார்ஜா, ஒக். 25

இலங்கையின் லஹிரு குமாரவும், பங்களாதேஷின் லிற்றன் தாஸூம் மைதானத்தில் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இருபது - 20 உலகக் கிண்ணத்தில் சுப்பர் - 12 போட்டியில் இலங்கை, பங்களாதேஷ் அணிகள் நேற்று மோதின.

இதில், பங்களாதேஷ் அணியின் தொடக்க வீரரான லிற்றன் தாஸ் 16 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். லஹிரு குமார வீசிய பந்தை உயர்த்தி அடிக்க முயன்று சானகவிடம் பிடிகொடுத்து அவர் ஆட்டமிழந்தார்.

அவர் ஆட்டமிழந்தவுடன் லிற்றன் தாஸை நோக்கி லஹிரு குமார ஆக்ரோஷமாக பேசியவாறு நடந்தார். லிற்றன் தாஸ/ம் பதிலுக்குக் கடுமையாகப் பேச வாக்குவாதம் ஏற்பட்டது. முகமது நைம் வாக்குவாதத்தை விலக்கிவிட லஹிருவை தள்ளினார்.

இதன்பிறகு, இலங்கை அணி வீரர்களும், நடுவர்களும் தலையிட்டு இருவரையும் விலக்கினர். எனினும், லிற்றன் தாஸ் துடுப்பு மட்டையை உயர்த்தி ஏதோகூற லஹிரு கடும் கோபத்துடன் சண்டையிடவும் முயன்றார்.

இதனால், ஆட்டத்தின் நடுவே சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

முன்னரும், இலங்கை - பங்களாதேஷ் வீரர்கள் மோசமான முறையில் வாக்குவாதங்களில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஆஸி. திணறல் வெற்றி!

டுபாய், ஒக். 25

தென்னாபிரிக்காவுக்கு எதிராக தட்டுத்தடுமாறி 5 விக்கெட்களால் வெற்றி கொண்டது அவுஸ்திரேலியா அணி.

தென்னாபிரிக்கா - அவுஸ்திரேலியா மோதிய போட்டி நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அபுதாபியில் நடந்தது. நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணி பந்துவீச்சை தெரிவு செய்தது.

தென்னாபிரிக்க அணி தொடக்கத்திலேயே பலத்த சரிவை கண்டது. அணித் தலைவர் பவுமா 12, டி கொக் 7, வேன் டெர் டுஸன் 2 என சொற்ப ஓட்டங்களுடன் வெளியேறினர். எய்டன் மார்க்ரம் மட்டுமே ஒரு முனையில் நிலைத்து ஆடினார். கிளாஸன் 13, மில்லர் 16, பிரிட்டோரியஸ் 1, கேசவ் மகராஜ் 0, நோர்ட்ஜே 2 என வந்தவேகத்திலேயே பெவிலியன் திரும்பினர்.

மார்க்ரம் ஒரு சிக்ஸர், 3 பௌண்ட்ரிகளுடன் 40 ஓட்டங்களை எடுத்து ஸ்ரார்க் பந்தில் ஏட்டமிழந்தார். காகிஸோ ரபாடா 19 ஓட்டங்களுடனும், ஷம்ஸி ஓட்டம் எதுவும் எடுக்காமலும் களத்தில் இருந்தனர்.

நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் தென்னாபிரிக்க அணி 9 விக்கெட்களை இழந்து 118 ஓட்டங்களை எடுத்தது.

ஆஸி தரப்பில் ஸ்ரார்க், ஹசல்வூட், சம்பா ஆகியோர் தலா 2 விக்கெட்களை சாய்த்தனர்.

119 என்ற இலகுவான இலக்கு நோக்கி துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா ஓட்டங்களை எடுக்க முடியாமல் திணறியது.

அணித் தலைவர் அரோன் பின்சட்க் அவுட்டான நிலையில், டேவிட் வோர்ணர் 14, மிற்செல் மார்ஷ் 11 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தனர். அதன் பின் ஸ்டீவ் ஸ்மித் (35 ஓட்டங்கள்), மக்ஸ்வெல் (18) இணைந்து ஆடி ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினர்.

அவர்கள் வெளியேறிய நிலையில், சகலதுறை வீரர் மோர்கஸ் ஸ்ரொய்னிஸ் 24, மத்தியூ வேட் 15 என ஆட்டமிழக்காமல் ஓட்டங்களை சேர்க்க இறுதி ஓவரில் வெற்றி இலக்கை அடைந்தது அவுஸ்திரேலியா.

முடிவில், 19.4 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 121 ஓட்டங்களைசேர்த்த ஆஸி. அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் தென்னாபிரிக்காவை வென்றது.

தென்னாபிரிக்க தரப்பில் நோர்ட்ஜே 2 விக்கெட்களை கைப்பற்றினார்.

(ஐ)






## உலக ரென்னிஸ் தொடர்; ஆஷ்லே பார்டி விலகல்!

சிட்னி, ஒக். 25

உலக பெண்கள் ரென்னிஸ் போட்டி உட்பட இந்த ஆண்டில் நடைபெறவுள்ள எந்தப் போட்டியிலும் பங்கேற்க மாட்டேன் என்று முதல்நிலை வீராங்கனையான அவுஸ்திரேலியாவின் ஆஷ்லே பார்டி தெரிவித்துள்ளார்.

தரவரிசையில் முதல் - 8 வீராங்கனைகள் மட்டும் பங்கேற்கும் உலக பெண்கள் ரென்னிஸ் இறுதி சுற்று போட்டி மெக்சிகோவில் அடுத்த மாதம் 10 ஆம் தகிதி ஆரம்பமாகிறது. இந்த போட்டியிலிருந்தே காயம் காரணமாக ஆஷ்லே பார்டி வெளியேறினார்.

கடைசியாக 2019ஆம் ஆண்டு நடந்த உலக ரென்னிஸ் போட்டியில் சம்பியன் பட்டம் வென்றவரான 25 வயது ஆஷ்லே பார்டி வெளியிட்டுள்ள அறிக்கையில், 'உலக பெண்கள் ரென்னிஸ் போட்டி உள்பட இந்த ஆண்டில் நடைபெறும் எஞ்சிய எந்த போட்டியிலும் நான் கலந்து கொள்ளமாட்டேன் என்பதை தெரிவித்து கொள்கிறேன்' என்று கூறியுள்ளார். (ஐ)



# 6 இந்திய கப்பல்கள் இலங்கைக்கு வந்தன!

கொழும்பு, ஒக். 25

ஆறு இந்திய கப்பல்கள் நான்கு நாட்கள் பயணமாக இலங்கை வந்துள்ளன.

இலங்கை - இந்தியா இடையிலான நெருங்கிய நட்புறவு மற்றும் தோழமையை வெளிக்காட்டும் மற்றொரு சந்தர்ப்பமாக இளம் உத்தியோகத்தர்கள் மற்றும் பயிற்சி அதிகாரிகளின் வினைத்திறனை மேலும் விரிவாக்கும் இலக்குடன் முதல் பயிற்சி படையணியின் 6 இந்திய கப்பல்கள் வந்துள்ளன என்று இலங்கைக்கான இந்தியத் தூதரகம் ருவிட்டரில் தெரிவித்துள்ளது.

இந்த 6 கப்பல்களில் ஐ.என்.எஸ்.மகர் ரூ ஷர்துல் ஆகிய கப்பல்கள் கொழும்பு துறைமுகத்தில் இருக்கும். இதே வேளை, ஐ. என். எஸ். சுஜாதா, தரங்கனி, சுதர்ஷினி மற்றும் சி. ஜி. எஸ். விக்ரம் ஆகிய கப்பல்கள் திருகோணமலை வந்துள்ளன. (ஐ)




# பொறியியல் கல்வி நிறுவகத்தின்

## புத்தாக்க போட்டியில் யாழ். பல்கலை முதலிடம்

யாழ்ப்பாணம், ஒக். 25,

இலங்கை பொறியியல் கல்வி நிறுவகத்தினால், இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் மாணவர் அணிகளுக்கிடையில் நடத்தப்பட்ட புத்தாக்க கண்டுபிடிப்பாளர் போட்டியில் யாழ். பல்கலைக்கழக மாணவர் அணி பிரபலமான கண்டுபிடிப்புக்கான முதலாம் பரிசைப் பெற்றுள்ளது .

மாணவர்களிடையேயான புத்தாக்க ஆர்வத்தை ஊக்குவிக்கும் வகையில், இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களுக்கிடையில் இலங்கை பொறியியல் கல்வி நிறுவகம் The Institution of Engineers Sri Lanka (IESL) நடத்திய இளமாணி மாணவர் புத்தாக்கப் போட்டியில் (Undergraduate Inventor of the Year - UIY) யாழ்ப்பாண இலங்கை பொறியியல் கல்வி நிறுவகத்தின் யாழ். பல்கலைக்கழக பிரிவினால் கண்டுபிடிக்கப்பட்ட உணவுக் கழிவுகளில் இருந்து லஞ்ச் சீற்றைப் பிரித்தெடுக்கும் பொறி (Lunch Sheet Separator from food waste) முதலாம் இடத்தைப் பெற்று பிரபலமான கண்டுபிடிப்புக்கான விருதுக்குரியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போட்டியின் வெற்றியாளர் தெரிவுக்கான நடுவர்களாக இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் அதிகாரிகள் பங்கு கொண்டிருந்தனர்.

# பிள்ளைகளுக்கு தடுப்பூசி செலுத்துவதற்கு தயங்காதீர்!

## பெற்றோரை கேட்கிறது மருத்துவர் சங்கம்

**கொழும்பு, ஒக். 25**

**பிள்ளைகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட கோவிட்-19 தடுப்பூசியை வழங்குவதற்கு தயங்க வேண்டாம் என்று இலங்கை மருத்துவர்கள் சங்கம் பெற்றோர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.**

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே குறித்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இலங்கை மருத்துவர்கள் சங்கத்தின் தலைவர், விசேட மருத்துவர் பத்மா குணரத்ன இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

உலகின் பெரும்பாலான நாடுகளில், பெருமளவான சிறுவர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டு, அதன் சாதக மற்றும் பாதுகாப்புத் தன்மை விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப் பட்டதன் பின்னரே இலங்கை அந்த தடுப்பூசிகளை பயன்படுத்துகின்றது.

பெற்றோர்கள் என்ற அடிப்படையில், பிள்ளைகளை தடுப்பூசி ஏற்றத்திற்கு உட்படுத்த முன்வர வேண்டும் என இலங்கை மருத்துவ சங்கத்தின் தலைவர் பத்மா குணரத்ன தெரிவித்துள்ளார். (ஐ)

# அடிப்படை பொருளாதார அறிவுகூட ராஜபக்ஷ அரசாங்கத்துக்கு இல்லை

## மனோ கணேசன்

கொழும்பு, ஒக். 25

விலைவாசி துன்பத்தில் சிக்கி விழி பிதுங்கும் நிலைமையில் நிற்கும் இந்நாட்டு மக்களிடம், “அரிசி-பருப்பு, விலைவாசிகளை பற்றி பேச நான் ஜனாதிபதி பதவிக்கு தெரிவு செய்யப்படவில்லை” என்று கூறி, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சிரிப்பு காட்டியுள்ளார். கி.மு. 31இல் பிறந்து, உலகை அளந்த, எங்கள் ஐயன் தெய்வப்புலவர் திருவள்ளுவர் சொல்லிச்சென்ற “இடுக்கண் வருங்கால் நகுக” என்ற வாக்கியத்துக்கு இணங்க நாமும் சிரித்து வைப்போம் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்.பி. கூறியுள்ளார்.

அரிசி, பருப்பு, விலைவாசிகளை பற்றி பேச தான் பதவிக்கு வரவில்லை என்ற ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கூற்று பற்றி மனோ எம்.பி. மேலும் கூறியுள்ளதாவது,

கோவிட் முதல் அலையின் போது, முதன் முறையாக நாட்டு மக்களை விளித்து ஜனா திபதி கோட்டாபய ராஜபக்ஷ, அன்று உரையாற்றினார். அந்த உரையில் அவர் கூறிய பிரதான விடயம் ஒன்று இருந்தது. அது என்ன?

செமன் மீன் ரின், பருப்பு, பால்மா ஆகிய அத்தியாவசிய பொருட்களின் விலைகளை குறைப்பேன். அவற்றை கட்டுப்பாட்டு விலைகள் தொடர்பான வர்த்தமானியை வெளியிடுவேன், என்று தனது உரையில் ஜனாதிபதி கூறினார்.

இதனால் எந்த பயனும் ஏற்படவில்லை என்பது வேறு விடயம். அவரது வர்த்தமானி விலைகளில் சந்தையில் பொருட்களை தேடியலைந்து மக்கள் ஏமாந்து போனதுதான் மிச்சம்.

சீனிக்கு ரூ. 49-75 என்ற மிகப்பெரிய வரி குறைப்பை இந்த ஜனாதிபதி செய்தார். வரி குறைந்தது. இதனால், சுமார் ரூ.1,595 கோடி வருமானத்தை திறைசேரி இழந்தது. ஆனால், இந்த ரூ.1,595 கோடி திறைசேரிக்கும் போகவில்லை. மக்களுக்கும் கிடைக்கவில்லை. எங்கே போனது? யாருக்கு கிடைத் தது? இதுபற்றி ஜனாதிபதி இதுவரை பதில் கூறவில்லை.

இதற்கிடையில் ஜனாதிபதி அரிசி, உணவு தானிய மொத்த வியாபார புறக்கோட்டை கடை வீதிக்கும் போய் அங்கே கடைகளில் சற்று நேரம் கணக்கு பிள்ளை வேலையும் பார்த்தார். பொருட்களை தேடி கண்டு பிடிக்கிறேன் என தனது இராணுவ அதிகாரி ஒருவரையும் நியமித்தார். அவரும் ஆலைகளை பிடிப்பேன், களஞ்சிய சாலைகளை உடைப்பேன், திறப்பேன் என்றார். ஒன்றும் பிரயோசனம் இல்லை.

கடைசியில், அரிசி விலைகள் தொடர்பில், ஜனாதிபதியின் வர்த்தமானிகளை தூக்கி கடாசி விட்டு ஆலை அதிபர்கள் தான் விலைகளை தீர் மானித்து அறிவித்தார்கள். இப் போது அந்த இராணுவ அதிகா ரியும் காணாமல் போய் விட்டார்.

சந்தை பொருளாதார நாட்டில், பொருட்களின் விலைகளை, “தேவை-விநியோகம்” (Demand & Supply) ஆகியவை தான் தீர்மானிக்க முடியும். இரண்டும் சமபலத்தில் இருக்க வேண்டும். தேவை கூடி, விநியோகம் குறைந்தால் விலை கூடும். தேவை குறைந்து, விநி யோகம் கூடினால் விலை குறையும்.

இந்த பொருளாதார அறிவு என்னிடம் உண்டு. எங்களிடம் உண்டு. இவர்களிடம் இல்லை. ஆகவே, இந்த இராணுவ அதிகாரிகள் தடாலடியாக விலைகளை தீர்மானிக்க முடியாது. அரசாங்கம், குறிப்பிட்ட பொருட்களின் இறக்குமதி, உள்நாட்டு உற்பத்தி ஆகியவற்றை அவதானித்து, வரி குறைப்பு, வரி விதிப்பு என்ற நிர்வாகத்தை மட்டுமே செய்ய வேண்டும்.

இராணுவ, சுங்க, வரி அரசாங்க அதிகாரிகளை கொண்டு வர்த்தக சமூகத்தை மிரட்டி காரியமாற்ற முடியாது. மிரட்டினால், “போதுமடா சாமி” அல்லது “போதுமடா ஆமி” என்று கூறி விட்டு வர்த்தக சமூகம் கடைகளை மூடி விட்டு வீடுகளில் இருப்பார்கள். “வேறு வழியில்லை.

இந்த ராஜபக்ஷ அரசுக்கு அடிப்படை பொருளாதார அறிவு இல்லை. பொருளியல் விஞ்ஞான கேள்விகளுக்கான பதில்கள், அடித்து கேட்டாலும் இவர்களிடம் கிடைக்காது. தெரியாத வேலையை செய்ய போய் இப்போது இவர்கள் மூக்குடைந்து போய் இருக்கின்றனர். இன்று, வாழ்க்கை செலவு விலைவாசி விஷயம் கைமீறி போனவுடன் ஜனாதிபதி விலை வாசியை தீர்மானிக்க நான் இந்த பதவிக்கு வரவில்லை என மாற்றி போடுகிறார். ஆகவே இடுக்கண் வருங்கால் நகுக!

# அரசாங்கத்திலிருந்து

## சுதந்திர கட்சி வெளியேறாது!

## அமைச்சர் மஹிந்த அமரவீர

கொழும்பு, ஒக். 25

பொதுஜன பெரமுனவின் பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினர்களின் தேவைக்கமைய அரசாங்கத்தில் இருந்து வெளியேற வேண்டிய அவசியம் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்கு கிடையாது. அரசாங்கத்திலிருந்து வெளியேற வேண்டுமாயின் அந்தத் தீர்மானத்தை கட்சி மட்டத்தில் முன்னெடுப்போம் என சுற்றாடல் துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஆசிரியர் - அதிபர் தொழிற்சங்க போராட்டம், விவசாயிகளின் போராட்டம் என பல பிரச்னைகள் தற்போதைய நிலையில் காணப்படுகின்றன. இப் பிரச்னைகளுக்கு சிறந்த தீர்வு வழங்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு உண்டு.

இந்தநிலையில், விவசாயிகளின் போராட்டம் தீவிரமடைந்துள்ளது. சேதன பசளை பாவனை குறுகிய காலத்தில் வெற்றிப் பெறாது. என்பதை ஆரம்பத்தில் கட்சி என்ற ரீதியில் குறிப்பிட்டோம்.

விவசாயிகளின் பிரச்னைக்கு தீர்வு பெற்றுக்கொடுக்கும் வகையில் சுதந்திர கட்சியினர் கருத்துரைக்கையில் அதனை விளங்கிக் கொள்ளாமல் பொதுஜன பெரமுனவின் பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினர்கள் சுதந்திர கட்சியினருக்கு எதிராக கருத்துரைப்பது அவர்களின் அரசியல் அனுபவத்தை வெளிப்படுத்தியுள்ளது - என்றார். (ஐ)

## பணிக்கு...

னைக்கு தீர்வுகாணும் போராட்டக் கோரிக்கைகளை வென்றெடுக்கும் வரையில் எதிர்வரும் 25 ஆம் திகதி (இன்று) முதல் கீழ்க்கண்ட தொழில்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.

ஆசிரியர் மற்றும் அதிபர்கள் கடமைகளுக்காக தங்களுடைய தனிப்பட்ட தொடர்பாடல் உபகரணங்களை பயன்படுத்துவதை தவிர்த்தல், காலை 7.30 முதல் பிற்பகல் 1.30 வரை மாத்திரம் அதிபர்கள் நிர்வாக நடவடிக்கைகளில் ஈடுபடுதல், காலை 7.30 முதல் பிற்பகல் 1.30 மணி வரை மாத்திரமே மாணவர்களின் பாதுகாப்பு தொடர்பில் பொறுப்புடையவராதல்.

வசதிகள் வழங்கப்படும் வரையில் இணையவழி கற்பித்தலில் இருந்து விலகி இருத்தல், ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளிலும், அரச விடுமுறை தினங்களிலும் கடமைகளில் ஈடுபடாதிருத்தல், ஆசிரியர்கள் மற்றும் அதிகாரிகள் வார நாட்களில் காலை 7.30 முதல் பிற்பகல் 1.30 வரை கற்பித்தல் நடவடிக்கைகள் மாத்திரம் ஈடுபடல் (வெளி நிறுவனங்களில் இருந்து வரும் கடமைகள், பாடசாலைகளின வெவ்வேறு வேலைத்திட்டங்கள், அடையாள அட்டை தயாரித்தல், சுகாதாரப் பிரிவு நடவடிக்கை, வேலைத் திட்டங்கள் மற்றும் நிகழ்வுகளை ஏற்பாடு செய்தல், வலய மற்றும் கோட்ட காரியங்களுக்கு தகவல்களை வழங்குதல், தர ஆவணங்களை தயார் செய்தல், வருடாந்த மற்றும் ஐந்தாண்டு திட்டங்களை தயாரித்தல், பொருட்கள் மதிப்பாய்வு, பாடசாலை கல்விச் சுற்றுலா மற்றும் வேலைத் திட்டங்களுக்காக அழைத்துச் செல்லல், பாடசாலை அபிவிருத்தி குழுக் கூட்டத்தை நடத்துதல் போன்ற எந்த நடவடிக்கையிலும் ஈடுபடுவதை தவிர்த்தல்) ஆகிய விடயங்களே அவை.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின், இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பொதுச்செயலாளர் மஹிந்த ஜெயசிங்க உள்ளிட்ட 16 தொழில் சங்கங்களின் பிரதிநிதிகள் இந்தக் கடிதத்தில் கையொப்பமிட்டுள்ளனர். (ஐ)

## கொரோனாவால்...

30 வயதுக்கு உட்பட்டவர்களில் பெண் ஒருவரும், 30 தொடக்கம் 59 வயதுக்கு இடைப்பட்டவர்களில் 04 ஆண்களும், ஒரு பெண்ணுமாக 05 பேரும், 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 06 ஆண்களும் 06 பெண்களுமாக 12 பேரும் உயிரிழந்தனர்.

இந்நிலையில், நாட்டில் கொரோனா தொற்றால் உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 13 ஆயிரத்து 611 ஆக உயர்வடைந்துள்ளது. (ஐ)

## தேர்தல் நடந்தால்...

யத்துறை இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ. பதுளை மாவட்டத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துக்கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து தெரிவித்த அவர்,

“விமர்சனங்களுக்கு உள்ளாகுவது ராஜபக்ஷ குடும்பத்துக்கு சாதாரணமாகிவிட்டது. விமர்சனங்களுக்கு மத்தியில் எமது கிராமங்களுக்கு நிச்சயம் நாம் செல்வோம். விவசாயத்துடன் தொடர்பில்லாதவர்களும், சேதன பசளை தொடர்பில் தெளிவில்லாதவர்களும்தான் பெரும்பாலான போராட்டங்களில் ஈடுபடுகிறார்கள்.

சிறந்த திட்டங்களை செயற்படுத்தும் போது சவால்களும்,முதற்கட்ட தோல்விகளும் ஏற்படுவது சாதாரணமானது. தேர்தல் வெற்றியை இலக்காகக் கொண்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்த திட்டத்தை செயற்படுத்தவில்லை. நாளை தேர்தல் நடைபெற்றால் அரசாங்கம் நிச்சயம் தோல்வியடையும். விஷத்தை உண்டு மக்கள் இறந்தாலும் பரவாயில்லை. எனக்கு தேர்தல்வெற்றிதான் முக்கியமென ஜனாதிபதி கருதவில்லை.

மக்களின் நலனை உடல் ஆரோக்கியத்தை கருத்திற்கொண்டு தீர்மானம் எடுக்கும் அரச தலைவர்கள் குறைவாக உள்ளனர். சேதன பசளையை கொண்டு பெரும்பாலான விவசாயிகள் நெற்செய்கையிலும், மரக்கறி விவசாயத்திலும் ஈடுபடுகிறார்கள். சேதன பசளை பயன்படுத்தி விவசாய நடவடிக்கையினை வெற்றிகரமாக முன்னெடுத்துள்ளார்கள்.

சேதன பசளை திட்டம் தற்போது அரசியலாக்கப்பட்டுவிட்டது. சேதன பசளை திட்டம் தொடர்பில் ஒரு சில குறைப்பாடுகள்காணப்படுகிறது என்பதை ஏற்றுக்கொள்கிறோம். இதனை தேசிய பிரச்னையாக கருத்தில்கொண்டுஅனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்” எனத் தெரிவித்தார்.

## கோட்டாபயவுடனான...

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று மாலை 5.30 முதல் இந்த கூட்டம் நடந்தது. அரசாங்கத்துக்குள் அண்மைக்காலமாக சர்ச்சைகளை ஏற்படுத்திவரும் அமைச்சர் விமல் உட்பட்ட 21 பாராளுமன்ற உறுப்பினர்கள் இதில் கலந்துகொள்ளாமை அரச உயர்மட்டத்திற்கு கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளதாக அறியவருகின்றது.

இந்தக் கூட்டத்தில் பேசிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன்வைத்த திட்டங்களையே தற்போது செயல்படுத்தி வருவதாகவும் , 69 இலட்ச மக்களின் எண்ணங்களையே தாம் பிரதிபலிக்கிறார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்துக்குள் கருத்து வேறுபாடுகள் இருப்பது நியாயமானது என்றும் அவற்றை மேலும் வளர்க்காமல், வெளியே கொண்டுசெல்லாமல் உள்ளேயே தீர்த்துக் கொள்ளவேண்டியது அவசியம் எனவும் ஜனாதிபதி இங்கு தெரிவித்துள்ளாரென அறியமுடிந்தது.

பாராளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்டம் வரவுள்ளதால் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் அந்த நாட்களில் பாராளுமன்றத்தில் இருக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## டெல்டா பிளஸ்...

கத்தின் தலைவர் விசேட மருத்துவர் பத்மா குணர்தன தெரிவிக்கையில், “புதிய பிறழ்வாக டெல்டா பிளஸ் இனங்காணப்பட்டுள்ளது. எவ்வாறிருப்பினும் இந்த புதிய பிறழ்வு எவ்வாறு பரவும் , மனிதனுக்கு எவ்வாறு பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்பது தொடர்பில் உலக சுகாதார ஸ்தாபனம் இதுவரையில் எந்த அறிவிப்பையும் விடுக்கவில்லை.

எனவே, ஏனைய பிறழ்வுகளைப் போலவே டெல்டா பிளஸ் பிறழ்வும் நாட்டுக்குள் நுழையக் கூடிய அபாயம் காணப்படுகிறது. எனவே இது தொடர்பில் அவதானத்துடன் செயல்பட வேண்டும்.” என்றார். (ஐ)

## ஈஸ்டர்...

பரசர் பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பாக பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ், தமது கையெழுத்தில் கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகைக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

ஈஸ்டர் தாக்குதல் குறித்து தாம் கவலையடைகிறார் என்றும் அது தொடர்பாக தாம் பிரார்த்திக்கிறார் என்றும் பரிசுத்த பாப்பரசர் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## பாடசாலைகள்...

யாத மாணவர்களுக்காக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக கல்வி அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் அனைத்து பாடசாலைகளிலும் ஆரம்ப பிரிவு வகுப்புகள் இன்று முதல் ஆரம்பிக்கப்படுகின்றன.

200இற்கும் குறைவான மாணவர்கள் உள்ள ஆரம்ப பாடசாலைகள் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அமைச்சு பதவியை ராஜிநாமா செய்ய தயாராகிறார் கெஹலிய

கொழும்பு, ஒக். 25

சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தமது அமைச்சுப் பொறுப்பை ராஜிநாமா செய்ய தயாராகி வருகிறார் என்று உயர்மட்ட அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபன தலைவர் மருத்துவர் பிரசன்ன குணசேனவுடன் அமைச்சர் கெஹெலியவுக்கு ஏற்பட்ட கருத்து முரண்பாட்டையடுத்து, கூட்டுத்தாபன தலைவர் தமது பதவியை ராஜிநாமா செய்வதற்கான கடிதத்தை ஜனாதிபதிக்கு அனுப்பினார். ஆனால், அதனை ஏற்காத ஜனாதிபதி, மருத்துவர் குணசேனவை மேலும் ஒருமாதகாலம் காத்திருக்குமாறு கேட்டுள்ளார்.

இந்த நிலைமையில் அமைச்சின் கடமைகளை செய்வதில் ஏற்பட்டுள்ள தார்மீக நெருக்கடிகளை கருத்தில்கொண்டு, அமைச்சு பதவியை ராஜிநாமா செய்ய கெஹெலிய ஆலோசித்து வருகிறார் என்று கூறப்படுகின்றது.

இந்த வாரத்தில் இது தொடர்பான விசேட அறிவிப்பு வரலாம் என்று கூறப்படுகின்றது.

(ஐ)

# மாகாண சபை, உள்ளூராட்சி தேர்தல்கள் ஒரே தினத்தில் நடத்தப்பட வேண்டும்

## ஜாதிக ஹெல உறுமய யோசனை

கொழும்பு,ஒக். 25

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்ற தேர்தல்கள் 4 வருடங்களுக்கு ஒருமுறை ஒரு தினத்தில், ஒரே தடவையில் நடத்த வேண்டும் என ஜாதிக ஹெல உறுமய பிரேரணை முன்வைத்ததுள்ளது.

அமைச்சர் தினேஸ் குணவர்த்தனவின் தலைமையிலான பாராளுமன்ற விசேட குழு கூட்டத்திலேயே, ஜாதிக ஹெல உறுமய மேற்கண்டவாறு பிரேரணை முன்வைத்துள்ளது.

ஒவ்வொரு தேர்தலிலும் வேட்பாளர் பட்டியலில் நூற்றுக்கு 25 வீதம் பெண்களின் பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும், விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தின் போது அது மூன்றில் ஒரு பங்காக உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனவும் அக்கட்சி குழுவில் சுட்டிக்காட்டியது.

# பிரச்னைகளை திசைதிருப்பவே நாட்டில் மாடறுப்பு தடை சட்டம்!

## முஜிபுர் ரஹ்மான் எம். பி. சாடல்

கொழும்பு, ஒக். 25



நாட்டில் விலை அதிகரிப்பு, விவசாயிகளுக்கு உரம் இன்மை உள்ளிட்ட பல்வேறு பிரச்னைகள் மேலெழுகிறன்ற சந்தர்ப்பத் தில் இனவாத சிந்தனையுடன் மாடறுப்பு தடை விவகாரத்தை முன்னிருத்தி மக்களை திசை திருப்ப ராஜபக்ஷ அரசாங்கம் முற்படுகிறது என்று கொழும்பு மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் முஜி புர் ரஹ்மான் தெரிவித்துள் ளார்.

மாடறுப்புக்கு தடை விதிப்பதற்கு அமைச்சரவையில் மேற்கொள்ளப்பட்டுள்ள தீர்மானம் குறித்து அவர் வெளியிட்டிருக் கும் அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

“நாட்டில் நாளுக்கு நாள் வாழ்வாதார பிரச்னைகள் அதி கரித்துச் செல்கின்றன. மக்களின் ஜீவனோபாயம் முற்று முழுதாக பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில் பொருளா தாரத்தை நிர்வகிக்க முடியாது அரசாங்கம் திண்டாடுகின்றது. விவசாயிகளின் பிரச்னைகள் இன்று மேலெழுந்துள்ளன. அவர்களுக்கு தேவையான உரம் உரிய நேரத்தில் கிடைப்பதில்லை. அரசின் திட்டமிடலற்ற கட்டுப் பாடுகள் அவர்களை பெரும் அசௌகரியத்துக்கு ஆளாக்கி இருக்கின்றது. இதனால் நாடு முழுவதிலும் விவசாயிகள் வீதிக்கு இறங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

அத்தோடு, நாளுக்கு நாள் அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிக்கப்படுகின்றது. இதனால், மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றாக பாதிக்கப்பட்டிருக்கிறது. விலை அதிகரிப்பை மக்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. சமையல் எரிவாயு, எரிபொருட்களின் விலை சடுதியாக உயர்வடைந்திருக்கின்றது. அரிசிக்கான உத்தரவாத விலையை அரசாங்கத்தால் கட்டுப்படுத்த முடியாமல் கை மீறிப் போயிருக்கின்றது. இது மாத்திரமின்றி, கட்டட நிர்மா ணப் பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றத்தை மக்களால் தாங்கிக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது.

இந்நிலையில் அரசாங்கம் இவற்றை கட்டுப்படுத்தி மக்க ளுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுக்காது இவ்விடயங்களை இனவாதத்தின் ஊடாக திசை திருப்பி மக்களை ஏமாற்றும் நடவடிக்கைகளையே தொடர்ந் தும் செய்கிறது. இதனாலேயே மாடறுப்புக்கான தடையை நிறைவேற்றியுள்ளது. இந்தத் தடையால், அதனுடன் இணைந்த அனைத்து தொழில் துறைகளும் பாதிக்கப்படுகின்றன - என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## அதிகரிக்கிறது...

டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். கடந்த வாரத்தில் மாத்திரம் 688 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இந்த ஆண்டில் கடந்த 10 மாதங்களில் 20 ஆயிரத்திற்கும் அதிகமான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்ட போதிலும் , கடந்த ஆண்டு முழுவதிலும் 34 ஆயிரத்து 411 டெங்கு நோயாளர்களே இனங்காணப்பட்டிருப்பதாகவும், கடந்த ஆண்டு வாரமொன்றுக்கு சுமார் 269 டெங்கு நோயாளர்களே இனங்காணப்பட்டனர் என்றும் தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

மழையுடனான வானிலையால் இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# பாகிஸ்தான் அணியிடம் மண்டியிட்டது இந்தியா!

டுபாய், ஒக். 25

நேற்றிரவு நடந்த போட்டியில் 10 விக்கெட்களால் இந்திய அணியை வீழ்த்தியதன் மூலம் பெரும் புகழையும் வெற்றியையும் பெற்றது பாகிஸ்தான் அணி.

இருபது - 20 உலகக் கிண்ணத்தில் டுபாயில் நேற்று நடந்த போட்டியில் பரமவைரிகளாக பார்க்கப்படும் பாகிஸ்தான் - இந்திய அணிகள் மோதின.

இந்தியா நிர்ணயித்த 151 ஓட்ட இலக்கை விரட்டிய பாகிஸ்தான் அணிக்கு, முஹமது ரிஸ்வான் 78 ஓட்டங்களையும், அணித் தலைவர் பாபர் அசாம் 68 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற 152 ஓட்டங்களைப் பெற்று மிகப் பெரிய வெற்றியைப் பெற்றது. இது உலகக் கிண்ணத்தில் இந்தியாவுக்கு எதிராகப் பாகிஸ்தான் பெற்ற முதல் வெற்றியாகும்.



முன்னதாக இந்திய அணி துடுப்பெடுத்தாடிய போது, ஷா அப்ரிடியின் வேகப் பந்தில் இந்தியாவின் ஆரம்ப வரிசை தடுமாறியது. இதனால், 31 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களை இழந்தது.

அணித் தலைவர் விராட் கோலி பொறுமையாக ஆடி அரைச்சதம் கடந்தார். இருபது - 20 போட்டியில் இது அவரின் 29ஆவது அரைச்சதமாக அமைந்தது. அவர் 5 பௌண்ட்ரிகள் ஒரு சிக்ஸருடன் 57 ஓட்டங்களை எடுத்தார். ரிஷப் பந்த் 2 சிக்ஸர்கள், 2 பௌண்ட்ரிகளுடன் 39 ஓட்டங்களை எடுத்திருந்தார். 20 ஓவர்களில் இந்திய அணி 7 விக்கெட்களை இழந்திருந்தது.

பாகிஸ்தானின் பந்துவீச்சில் ஷா அப்ரிடி 3 விக்கெட்களையும், ஹசன் அலி 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

இலக்கைத் துரத்திய பாகிஸ்தான் 17.5 ஓவர்களில் இலக்கை அடைந்திருந்தது.

போட்டியின்நாயகனாக ஷா அப்ரிடி தெரிவானார்.

இதேவேளை, இந்தப் போட்டி நீண்ட காலத்துக்கு பின்னர் உலகம் முழுவதும் பார்க்கப்பட்ட போட்டி யாக அமைந்துள்ளது. இந்தப்போட்டியை உலகம் முழு வதும் 27.3 கோடி பார்வையாளர்கள் தொலைக்காட்சியில் நேரடியாக பார்வையிட்டனர். (ஐ)



# அசலென்க, பானுக அபாரம் இலங்கை அசத்தல் வெற்றி!

சார்ஜா, ஒக். 25

சரித் அசலென்க, பானுகவின் அபாரமான அரைச் சதங்களின் உதவியுடன் பங்களாதேஷ் அணியை வெற்றி கொண்டது இலங்கை அணி.

இருபது - 20 உலகக்கிண்ணத் தொடரில் சுப்பர் 12 சுற்றில் நேற்று இலங்கை - பங்களாதேஷ் அணிகள் மோதின. சார்ஜாவில் நடந்த இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

இதனால், முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணிக்கு முஹமட் நயிம் சிறப்பான அடித்தளத்தை இட, மறுமுனையில் லிற்றன் டாஸ் 16, சகீப் அல் ஹசன் 10 ஓட்டங்கள் என வீழ்ந்தனர்.

அடுத்து வந்த முஸ்பிஹூர் ரஹீம் அதிரடியாக ஆடினார். இதனிடையே, நயிம் 52 பந்துகளில் 6 பௌண்ட்ரிகளுடன் 62 ஓட்டங்களை சேர்த்து ஆட்டமிழந்தார்.

20 ஓவர்கள் முடிவில் 4 விக்கெட்களை மட்டும் இழந்த பங்களாதேஷ் 171 ஓட்டங்களை எடுத்தது.

இலங்கையின் பந்துவீச்சில் லஹிரு குமார, பினுர பெர்னாண்டோ, சாமிக கருணாரத்ன ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு ஆடிய இலங்கை அணிக்கு தொடக்கம் கொடுத்த குசல் பெரேரா ஓர் ஓட்டத்துடனும், பதும் நிசங்க 24 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

ஆனால், இரண்டாவது விக்கெட்டுக்காக களமிறங்கிய சரித் அசலென்க அதிரடியாக ஆடினார். ஆனால், மறுமுனையில் அவிஸ்க பெர்னாண்டோ 0, வனிந்து ஹசரங்க 6 என வெளியேறினர். 5ஆவது விக்கெட்டுக்காக அசலங்கவுடன் சேர்ந்த பானுகவும் சிறப்பாக ஆடி அணியை வெற்றியை நோக்கி அழைத்து சென்றனர்.

அசலென்க 49 பந்துகளில் 5 பௌண்ட்ரிகள், 5 சிக்ஸர்களை விளாசி 80 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார். பானுக ராஜபக்ஷ 31 பந்துகளில் 3 சிக்ஸர்கள், 3 பௌண்ட்ரிகளுடன் 53 ஓட்டங்களை எடுத்தார்.

18.5 ஓவர்களில் இலங்கை அணி 5 விக்கெட்களை இழந்து 172 ஓட்டங்களை எடுத்து வெற்றி பெற்றது.

பங்களாதேஷின் பந்துவீச்சில் சகீப் அல் ஹசன், நசூம் அகமட் ஆகியோர் தலா 2 விக்கெட்களை கைப்பற்றினர். (ஐ)










இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 25.10.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்-
சிவஸ்ரீ.கு.வை.க வைத்தீஸ்வர குருக்கள்
தலைவர் இந்து குருமார் அமைப்பு



7.05 மணி : உளவியல் கருத்து-
உளவளத்துனையாளர் நா.நவராஜ்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : பண்டிதர் திருநாவுக்கரசு
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் :
டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : தொடர் நாடகம்-சிங்கப் பெண்ணே
11.00 மணி : கொழும்பு-16-மறு ஒளிபரப்பு
11.30 மணி : மனிதனின் மறுபக்கம்

**பகல்**

12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
நகைச்சுவை நிகழ்ச்சி
1.00 மணி : அறிந்தும் அறியாமலும்
( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-நடுவன். தோரணை
ஆகிய திரைப்படங்களின் காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்- சிறுவர்களை
மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : ரெயிலர் ரைம்
06.30 மணி : நலந்தானா-வைத்தியர் அஜந்தா
கேசவராஜ்



**இரவு**

7.00 மணி : சொற்சமர் -பாடசாலை
மாணவர்களுக்கான விவாத நிகழ்ச்சி




8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சாட்சியம்
09.30 மணி: ஹலோ கோடம்பாக்கம்
10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**

5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி :கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இந்த வார புனிதர் (யாழ்ப்பாணம்)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : ஞானவழி (மறு ஒளிபரப்பு சனி)
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறுஒளிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : விவிலியம் அறிவோம்
(திருகோணமலை) ஞாயிறு

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்) மறு ஒளிபரப்பு
04.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு) மறுஒளிபரப்பு
05.00 மணி: திருப்பலி (திருகோணமலை)
மறுஒளிபரப்பு
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறுஒளிபரப்பு)
07.00 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள்
மறு ஒளிபரப்பு
7.30 மணி : இந்த வார புனிதர் (யாழ்ப்பாணம்)
மறு ஒளிபரப்பு

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு